Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம். பிலவ புரட்டாசி 17 ஆம் நாள் | ரபி ஆகிர் 22 | (3-10-61) | செவ்வாய்க்கிழமை | இதழ் 198

வாசன் உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்—2 மதுரை

# டாக்டருக்கு ஏற்பட்ட அவதி!

## இடமாற்ற உத்தரவு இடையில் நிறுத்தப்பட்டது

### யாழ்ப்பாணம் வந்து மீண்டும் இரத்தினபுரி சென்றார்

கொழும்பு, திங்கள்

இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலுள்ள திரு. பாலசுப்பிரமணியம் என்ற டாக்டர் ஒருவருக்கு அக்டோபர் முதல் திகதிமுதல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும்படி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இரத்தினபுரியில் அவருக்கும் பிரிவுபசாரமும் அளிக்கப்பட்டது. தனது உடைமைகளுடன் யாழ்ப்பாணம் வந்த அவர் சுகாதார சுப்ரீண்டனைச் சந்தித்தபோது, சுகாதார டைரக்டரிடமிருந்து கிடைத்த ஒரு [illegible]தி அவருக்குக் காத்திருந்[illegible].

[illegible]று உத்தரவு வரும்வரை [illegible]டமாற்றம் அதில் நிறுத்தி வைக்கப்பட்டு, உடனடியாக இரத்தினபுரியில் கடமையாற்[illegible]ம்படி அதில் பணிக்கப்பட்டிருந்தது. அவர் மீண்டும் இரத்தினபுரி சென்றபோது, அவரது இடத்திற்கு திரு. [illegible]பரமேஸ்வரன் என்ற டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். சுகாதார டைரக்டரிடமிருந்து திரு. பாலசுப்பிரமணியத்துக்கு வேறு ஒந்தச் செய்தியும் இதுவரை கிடைக்கவில்லை.

## சிங்கள அறிவுத்திறன் பரீட்சை

### ஜனவரியில் நடைபெறும்

கொழும்பு, திங்கள்

இவ்வருடம் ஜூன் மாதம் நடைபெறவிருந்த சிங்கள அறிவுத் திறனுக்கான பரீட்சை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. அரசாங்க சேவையாளரும் ஸ்தலஸ்தாபன சேவையாளரும் கொண்ட தூதுகோஷ்டியொன்று பரீட்சையை 1962 ஜனவரியில் நடாத்துமாறு நீதிமந்திரி செனட்டர் சாம் பி. சி. பெர்ணண்டோவைக் கேட்டுக் கொண்டது. நீதிமந்திரி இப் பரீட்சையை ஜனவரியில் நடாத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

சிங்களம் மட்டும் சட்டம் அமுல்செய்வதில் உள்ள கஷ்டங்கள் பற்றிய முறைப்பாடுகளை ஆராயும்படி நீதிமந்திரியின் உதவிக் காரியதரிசி திரு. டி. விமலரத்ன நியமிக்கப்பட்டுள்ளாரெனத் தெரியவருகிறது.

## ஜென்னிங்ஸ் கேம்பிரிட்ஜின் உபவேந்தர்

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராய் இருந்த சர் ஐவார் ஜென்னிங்ஸ், பிரிட்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராய் நியமிக்கப்பட்டிருக்கிறார். சர் ஜென்னிங்ஸ், 1954ம் ஆண்டு இலங்கையை விட்டுச் சென்றார்.

## இன்று

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்கு பாரதிவிழாக் கொண்டாட்டம் நடைபெறும். இவ் விழாவில் உடுபபிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் சொற்பொழிவாற்றுவார்.

## றெக்கர் கிளப் வெற்றி

சுன்னாகம், திங்கள்

சுன்னாகம் றெக்கற் கிளப் வீரர்கட்கும், போயிட்டி வீரர்கட்கு மிடையே நடந்த சிநேகபூர்வமான தாச்சி விளையாட்டுப் போட்டியில் ஏ-பிரிவு 16—4 பி-பிரிவு 10—1 பழங்கள் எடுத்து றெக்கற் கிளப் வெற்றியீட்டியது. முடிவில் தேநீர் விருந்து உபசாரமும் நடைபெற்றது.

## இலங்கை-ஈராக் வர்த்தக உடன்படிக்கை

கொழும்பு, திங்கள்

இலங்கை – ஈராக் வர்த்தக உடன்படிக்கையை நிச்சயப்படுத்தும் பத்திரங்கள் இன்று பரிமாறிக்கொள்ளப்பட்டன.

## "மேற்கு, தெற்கு மாகாண மக்களுக்கு பிரதமர் அஞ்சுகிறார்"

### அவிசாவளையில் திரு. பிலிப் குணவர்த்தன பேச்சு

கொழும்பு, திங்கள்

"மேற்கு, தெற்கு மாகாண மக்கள் அரசாங்கத்தை வீழ்த்தி விடுவார்கள் என்ற அச்சத்தினால்தான் அவசரகாலச் சட்டத்தை பிரதமர் சிறிமா விலக்காமலிருக்கிறார்" என அவிசாவளையில் நடைபெற்ற எம். ஈ. பி. கூட்டமொன்றில் பேசிய திரு. பிலிப்குணவர்த்தன கூறினார்.

"அவசரகாலச்சட்ட இரும்புப்பிடியின்கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை நிலை நிறுத்தவும் பிரதமர் சதிசெய்கிறார். பெரிய அரசியல் விஷயங்களைக் கையாளப் பிரதமருக்குத் திறமையில்லை. அரசாங்கப் பொறுப்பை திறமையானவர்களிடம் விட்டு, பிரதமர் வீட்டுவிவகாரங்களைக் கவனிக்கச்செல்லுமாறு அவருக்கு ஆலோசனை கூறுகிறேன்" என்றும் திரு. பிலிப் குறிப்பிட்டார்.

## 'அஞ்ஞானம் இருக்குமிடத்தில் விஸ்வாசம் வராது'

### சிவானந்தஜீ ஜயந்தி விழாவில் சச்சிதானந்தர் உரை

யாழ்ப்பாணம், செவ்.

"இன்று ஓர் புனித தினம். மகாத்மா காந்தியடிகள் தோன்றிய ஜயந்தி தினத்தில் தான் சாதகர்களுக்கு வழி காட்டியாக விளங்கும் சுவாமி சிவானந்தாவின் தினத்தையும் கொண்டாடுகிறோம். இவர்கள் இருவரும் அன்பு, அகிம்சை, சத்தியம் போன்றவற்றில் தான் தங்கள் வாழ்நாளைக் கழித்தார்கள்" என்று யாழ்ப்பாண நகரமண்டபத்தில் திவ்விய ஜீவன சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சுவாமி சிவானந்த மகரிஷியின் ஜயந்தி விழாவில் யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் கூறினார்.

"திருவருள் திட்டம் ஒன்றுண்டு. அதிலே நமக்கு எவ்வளவோ பங்கு உண்டு. அவனன்றி ஒரு அணுவும் அசையாது. எல்லாம் அவன் செயல். என்று சகலமதங்களும் போதிக்கின்றன.

"அஞ்ஞானம்இருக்கிறஇடத்தில் விசுவாசம் வராது. ஞானம் என்ற வேல் நுழைந்ததால்தான் சூரபத்மன் முருகக் கடவுளை உணர்ந்தான். ஆதலால் "நான் எனது" என்பவற்றிலிருந்து என்று விடுபடுகிறோமோ அன்றைக்குத்தான் நல்ல நிலைக்கு வருவோம்.

"அண்டசராசரங்களையும் ஆட்டிப்படைக்கிறான் ஆண்டவன். இன்றைய அணுசகாப்தத்தில் என்னநடக்குமோ தெரியாது. அணுகுண்டு நம் தலையில் விழுவதும், விழாததும் ஆண்டவனின் சித்தப்படியே நடக்கும்" என்றும் யோகிராஜ் கூறினார்.

சுகாதார அதிகாரி திரு. எஸ். சிவஞானசுந்தரம், இந்துசாதன பத்திராதிபர் திரு. சிவப்பிரகாசம், நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா, செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோரும் பேசினர்கள்.

கூட்டத்துக்கு மாவட்ட கூட்டு நீதிபதி வி. தனபாலசிங்கம் தலைமைவகித்தார்.

## அகில்இந்தியாவிலும் காந்தி ஜயந்தி விழா

புதுடில்லி, அக். 2

காந்திஜியின் பிறந்ததினம் இன்று இந்தியா முழுவதிலும் கொண்டாடப்பட்டது. இத்தினத்தை யொட்டி பல்வேறு ராஜ்யங்களில் அபிவிருத்தித் திட்டங்களும், கோஷ்டி நூற்புயக்ஞம்களும், பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

புதுடில்லியில் ராஜ்காட்டிலுள்ள காந்திஜி சமாதிக்கு அதிகாலையிலேயே மக்கள் சென்று மலர்வைத்து அஞ்சலி செய்து பிரார்த்தனை நடத்தினர். உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் காலையில் காந்திஜி சமாதிக்குச் சென்று சமாதியை வலம்வந்து மலர் வைத்து அஞ்சலி செய்து பிரார்த்தனையில்கலந்து கொண்டார். பெருந்திரளான ஆண்கள், பெண்கள், குழந்தைகளும் காலையிலிருந்து சமாதிக்குச் சென்று மலர்களும், கையினால் நூற்றநூல்களையும் சமர்ப்பித்து அஞ்சலி செலுத்தினர். சமாதிக்கருகில் நூற்புயக்ஞமும் நடைபெற்றது.

ஆந்திரபிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. உத்தர பிரதேசத்தில் ஆறு கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

பஞ்சாப் ராஜ்யத்தில் பஞ்சாயத்து ராஜ்யமுறையை பிரதமர் நேரு ஆரம்பித்து வைத்தார்.

அமிர்தசரஸில் கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

புதுடில்லியில் இந்திய மத்திய சுகாதார மந்திரி திரு. கார்மார்க்கர் க்ஷயரோகிகளுக்கு அவர்களது இல்லங்களிலேயே சிகிச்சையளிக்கும் திட்டத்தை இன்று ஆரம்பித்து வைத்தார்.

## கூட்டு அரசாங்கம் ஒன்றை நிறுவுதல் அவசியம்

### காலி கூட்டத்தில் திரு. தஹநாயக்கா யோசனை

கொழும்பு, திங்கள்

"நமது நாடு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. சகல அரசியல் கட்சிகளும் தமது வேற்றுமைகளைத் தற்போதைக்கு மறந்து எல்லோரும் ஒரு கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்தி நாட்டையும் மக்களையும அபாயத்திலிருந்து காப்பாற்றவேண்டும்."

இவ்வாறு காலி எம். பி. திரு. தகநாயக்கா காலியில் நடைபெற்ற சமூகசேவா சங்கத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

"அரசியல் தலைவர்களாகிய திரு. டட்லிசேனநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, திருமதி பண்டாரநாயக்கா ஆகியோர் சேர்ந்து ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

## வருகிற 28-ம் திகதி கே. பி. எஸ. கச்சேரி

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோயில் தேர் திருப்பணி நிதிக்கு உதவும் பொருட்டு வருகிற 28-ம் திகதி ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளின் இன்னிசைக் கச்சேரி ஒன்று நடைபெறும். யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இக் கச்சேரி நடைபெறும்.



பற்பொடிகளிலே சிறந்தது
ஜெகஜோதி பற்பொடி
என்று மக்கள் தீர்ப்பு கூறிவிட்டார்கள்.
இலங்கையின் பல பாகங்களிலும் துரிதமாக விற்பனையாகிறது.
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா, கண்டி.

# பாண், பணிஸ் விலைத் திட்டம்

## மாற்றி அமைக்கயோசனை

கொழும்பு, திங்கள்

பாண் 'பணிஸ்' ஆகியவற்றின் மீது ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதியன்று விதிக்கப்பட்ட விலைத்திட்டத்தை அமுல் செய்வதில் செயல்முறைக் கஷ்டங்கள் அதிகம் இருப்பதால், அவ்விலை விதிகள் மாற்றப்பட இருக்கின்றன. 'பணிஸ்' பாண் துண்டுகள் மீது வித்தியாசமான எடைகளுக்கேற்ப ஆகஸ்ட் 10-ம் திகதியன்று விலைகள் விதிக்கப்பட்டன. கடந்த சனிக்கிழமையன்று வெளியாகிய 'கஸட்' அறிவித்தல் ஒன்று இந்த விலை நிர்ணயத் திட்டம் மாற்றப்படும் எனக் கூறுகிறது.

ஆகஸ்ட் 10-ம் திகதி விதிக்கப்பட்ட விலையின்படி ஒவ்வொரு அவுன்ஸ் எடையுள்ள பாண் துண்டு ஒன்றுக்கு 2 சதத்துக்கு மேற்படாது விற்கப்பட வேண்டுமென்றும் 2 அவுன்ஸ் எடையுள்ள பாண் துண்டு 4 சதத்துக்கு விற்கப்பட வேண்டுமெனவும் இரண்டரை அவுன்ஸ் மேலதிகமான நிறையுள்ள 'பணிஸ்' ஒன்று 12 சதத்துக்கு விற்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட இவ் விலைத் திட்டத்தை அமுல் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படக் கூடுமாகையாலும், உணவுக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் இவற்றை நன்கு கண்காணிக்க முடியாதபடியாலும் விலைவிதிப்பின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருப்பதாலும் விலை விதிப்புத் திட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென உணவுக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய சட்டத்தின்படி, 1 றாத்தல் பாண் 29 சதத்துக்கு அதிகமாக விற்ருல்தான் அது குற்றமாகுமெனவும் 'பணிஸ்' மீதும் இவ்வாறான புதிய விலையொன்று விதிக்கப்படுமெனவும் உத்தியோகபூர்வமாக அறியக்கிடக்கிறது.

# பஞ்சாபில் நேருஜி

## அமோக வரவேற்பு

சண்டிகார்ட், அக். 2

பஞ்சாப் ராஜ்யத்தில் பஞ்சாயத் ஆட்சிமுறையை ஆரம்பித்துவைப்பதற்காக பிரதமர் நேரு இன்று காலை சண்டிகார்ட் விமானநிலயத்தில் வந்திறங்கியபோது பஞ்சாப் கவர்னர் திரு. காட்கில், முதன் மந்திரி திரு. பிரதாப்சிங்கய்ரூன் ஆகியோரும் மற்றும் பெருந்திரளான மக்களும் திரண்டு நின்று பிரதமருக்கு அமோகவரவேற்பளித்தனர்.

விமான நிலயத்திலிருந்து கவர்னருடனும் முதன் மந்திரியுடனும் திரு. நேரு ராஜ்பவனுக்கு காரில் சென்றார். ராஜ்பவனுக்குச் செல்லும் எட்டுமைல் நீள வீதிகளில் பல்வேறு இடங்களிலும் மக்கள் திரண்டு நின்று நேருவை மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

# இரண்டாவது பீங்கான்

## தொழிற்சாலை; இடமாற்றம்

கொழும்பு, திங்கள்

இரண்டாவது பீங்கான் தொழிற்சாலை நிறுவும் இடம் சம்பந்தமாக உள்நாட்டு கலாச்சார, கைத்தொழில் அமைச்சு தனது திட்டத்தை மீண்டும் மாற்றிக் கொண்டுள்ளது.

புதிய பீங்கான் தொழிற்சாலை பொரலஸ்கமுவ என்ற இடத்தில் நிறுவப்பட வேண்டுமென்று திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்தத் திட்டத்தில்தான் பீங்கான் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டுமென்று முதலில் பீங்கான் தொழிற்சாலை கார்ப்பரேஷன் சிபார்சு செய்திருந்தது. ஆனல் இப்பொழுதுள்ள தொழிற்சாலையை விஸ்தரிக்கும் திட்டமாகவே இரண்டாவது தொழிற்சாலையும் நீர்கொழும்பில் அமைக்கப்பட வேண்டுமென்று கூறி பொரலஸ்கமுவையில் அமைக்க வேண்டுமென்ற சிபார்சைக் கைத்தொழில் அமைச்சு நிராகரித்தது.

நீர்கொழும்பில் இடவசதி போதாதிருப்பதால் பொரலஸ்கமுவையிலேயே இத் தொழிற்சாலையை அமைப்பதென்று இப்பொழுது அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

# குணமடையும் க்ஷயரோகிகள் கஷ்டம்

## உதவி செய்ய சங்கம் தீர்மானம்

மாவிட்டபுரம், செவ்வாய்

க்ஷயநோயினுற் பீடிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நிதி உதவி செய்து வருகிறது. ஆனல் அந்நோய் குணமானதும் அரசாங்கம் இவ்விதம் உதவியளிப்பதை நிறுத்திவிடுகிறது. இதனல் தொழிலேதும் செய்து பிழைக்க முடியாதவர்கள் வாழமுயாது மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இவ்வாறு க்ஷயரோக கஷ்ட நிவாரண தடுப்புச் சங்கத்தின் வலி - வடக்கு கிளைச் சங்கத்தின் சார்பில் தெல்லிப்பழை பிரிவுக் காரியாதிகாரியின் கந்தோரில் சமீபத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் வலி வடக்குக் காரியாதிகாரியும், கிளைச் சங்கத்தின் காரியதரிசியுமாகிய திரு. வ. கந்தப்பிள்ளை கூறினர்.

சங்கத்தின் தற்காலிகத் தலைவரும், தெல்லிப்பழைக் கிராமச் சங்கத் தலைவருமாகிய திரு. கு. கதிரையாண்டி பேசுகையில் தெரிவித்ததாவது.

நிதி விஷயத்தில் இவ்வருடம் புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சென்ற வருடம் பணம் முழுவதும் கொழும்பிலுள்ள இதன் தாய்ச் சங்கத்திடமே இருந்து வந்தது. இவ்வருடம் இங்கு சேர்க்கப்படும் பணத்தில் எழுபத்தைந்து சதவீதமும் இச்சங்கத்திடமே இருக்கும். இப்போதும் இப் பகுதியிலுள்ள நோயாளருக்கே வழங்க ஏற்பாடாகியுள்ளது.

அதிக பணம் சேர்த்துக் கொடுக்கும் குழுவிற்கு நன்சான்றுப் பத்திரம் அளிப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# புதுமுறைப் பரீட்சைகள்

உடுப்பிட்டி, திங்கள்

தொழில் வழிகாட்டிப் பரீட்சைகளை நடத்துதல், விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுதல், பரீட்சைப் பெறுபேறுகளை மதிபபிடுதல், ஆகியன பற்றிய சுற்று நிருபம் ஒன்று சகல பாடசாலை அதிபர்களுக்கும் வித்தியாதிபதியால் அனுபபபட்டுள்ளது.

இப்பரீட்சைகள் சொற்சாரா விவேகப் பரீட்சைகள் என்றும் சொற்களாலான விவேகப் பரீட்சைகள் என்றும் இரு பிரிவுகளிலடங்கும். ஒவ்வொரு பாடசாலையிலும் பதினென்று முதல் பதினறரை வயதுகளுக்கிடைப்பட்ட மாணவருக்கும் சொற்சாரா விவேகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு புள்ளிகள் தரபபடுத்தபபட்டு, மதிபபிடபபட்டு ஒவ்வொரு பிள்ளையினதும் விவேக ஈவு காண வேண்டுமென சகல வித்தியாதரிசிகளும் கேட்கபபட்டுள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகளை மதிபபிடுவதில் கஷ்டமேற்பட்டால் தொழில் வழிகாட்டுக் கிளையிலுள்ள நிபுணர்களை ஆசிரியர் கலந்தாலோசிக்கலாமென இச் சுற்று நிருபம் கூறுகிறது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.




கண் சம்பந்தமான வியாதியிறல் கஷ்டப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் துயரை நீக்கி அவர்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்றுள்ளோம். ஒரு முறை கலந்தாலோசியுங்கள்!
மூ.க.ஜெகநாதன்
யூனானி கண் வைத்தியநிபுணர்
பெரியகடை யாழ்ப்பாணம்

## வாடகைக்கு

சிறு வியாபாரமோ, கைத்தொழிலோ நடாத்தக் கூடிய இரு அறைக் கடையும் அத்துடன இணைந்த தங்கும் விடுதியும் வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டுவே தங்க வசதி உண்டு. விபரத்திற்கு: எஸ், வேலுப்பிள்ளை, வியாபாரம், 478, கே. கே. எஸ். வீதி, (சிவலிங்கப்புளியடி),யாழ்ப்பாணம்.

# வெல்லன் விநாயகர் ஆலயத் திருப்பணி

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலய எழுந்தருளி மண்டப வேலைகள் ஆரம்பித்துள்ளன. பிரபல தென்னிந்திய சிறப்பாசிரியர், ஓவியர் ஆகியோரின் மேற்பார்வையில் உருவாக இருக்கும் இம்மண்டபம் கட்டி முடிப்பதற்கு ரூபா 20,000 செலவாகுமெனத் தெரிகிறது.

# 7 மாதத்தின் பின் சம்பளம்

முள்ளியவளை, திங்கள்

கடந்த பங்குனி மாதம் அரசினரால் பொறுப்பு ஏற்கப்பட்ட புது பள்ளிக்கூடமான மாங்குளம், அம்பகாமம் அரசினர் தமிழ்ப் பாடசாலையைச் சேர்ந்த இரு ஆசிரியர்களுக்கும் 7 மாதம் சம்பளம் இம் மாதம் தான் கிடைத்தது.

## மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொனரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிளுடன்
மயில் - ரோஸ அடையாள மிட்டு

MONARA PAPPADAM — TRADE MARK
ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No. 18235 — A. M. BUHARI

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:
ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

## குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார்
மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருதெனியா.

# ஜோர்டான், துருக்கி ராஜீய உறவை எகிப்து துண்டித்தது

## சிரியாவை அங்கீகரித்ததால் நாஸரின் ஆத்திரம்

### சிரியாவில் புதிய ராணுவ தளபதி நியமனம்

கெய்ரோ, அக். 2

**ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து தனியாகப் பிரிந்து கொண்ட சிரியாவை அங்கீகரித்த ஜோர்டானுடனும், துருக்கியுடனும் ராஜீயத் தொடர்புகளை எகிப்து துண்டித்துக் கொண்டது.**

சிரியாவின் புதிய அரசாங்கத்தை குவாட்டிமாலா அரசாங்கமும் இப்பொழுது அங்கீகரித்துள்ளது.

சிரியாவில் புரட்சி ஏற்படவும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குள் பிளவு ஏற்படவும் ஜோர்டானும், துருக்கியும் உடந்தையாக இருந்தன வென்று கெய்ரோ ரேடியோ குற்றம் சாட்டியது.

சிரியாவின் வடக்குப் பகுதியில் புதிய அரசாங்கத்துக்கெதிராக பெரும் கிளர்ச்சி நடைபெற்றுவருவதாக கெய்ரோ ரேடியோ தெரிவித்தது. ஆனல் இக் கிழர்ச்சி பற்றி வேறு எங்கிருந்தும் தகவல் கிடைக்கவில்லை.

**எங்கும் அமைதி நிலவுகிறது.**

சிரியாவில் நிலைமை மாமூலாக இருக்கிறதென்றும் எங்கும் அமைதி நிலவுவதாகவும் டமாஸ்கஸ் ரேடியோ தெரிவித்தது.

சிரியாவிலுள்ள பாடசாலைகள், சர்வகலாசாலைகள் யாவும் மறு அறிவித்தல்வரை மூடும்படி சிரியா அரசாங்கத்தின் புதிய கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

மேஜர் சகாப்டீன் என்பவர் சிரியா இராணுவத்தின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். பதவியை ஏற்றுக்கொண்ட புதிய தளபதி நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சிரியாவிலுள்ள எகிப்து இராணுவ, அரசாங்க அதிகாரிகள் எல்லோரும் இன்று இராணுவ தலைமைக் காரியாலயத்தில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்களும் இவர்களது குடும்பங்களும் எகிப்துக்கு அனுப்பப்படுவார்கள்.

# சர்வகலாசாலைவரை கட்டாயசமயபோதனை

## சைவப்புலவர் சங்கம் கோரிக்கை

தெல்லிப்பழை,ஞாயிறு

"சமய பாட போதனை சர்வகலாசாலைவரை கட்டாயமாக்கப்படவேண்டும். சமயபாட போதனைகளுக்கு சமய பட்டதாரிகளே பொருத்தமும் உரிமையுமுடையவர்கள். இவர்களுக்கு பட்டதாரிகளுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்" என்று அகில இலங்கை சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம் கல்வி விசாரணைச் சபைக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

இத்தகவல் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கல்வி மந்திரியை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சைவப் புலவர் சங்கத்தின் ஆண்டுவிழா சென்ற வெள்ளிக்கிழமை மல்லாகம் இந்து ஆங்கில கல்லூரியில் நடைபெற்றபோது சங்கச் செயலாளர் சைவப் புலவர் ச. சச்சிதானந்தம் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

"நமது சங்கம் சென்னைசைவ சித்தாந்த மகா சமாஜத்திலுக்கே பெருந்தொண்டாற்றியுள்ளது. சமாஜத்தின் ஆசியையும் நன் மதிப்பையும் பெற்றுள்ள இச் சங்கம் புலவர் வகுப்புக்களையும் அதன் பரீட்சைகளையும் சமாஜத்திற்குத் துணை புரிந்து ஈழத்தில் நடத்திவைக்க அனுமதியையும் பெற்றுள்ளது. சைவப் புலவர் வகுப்பினை எதிரே வரும் விஜயதசமியிலன்று முதலாவதாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கச் சங்கம் தீர்மானித்துள்ளது. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு, திருக்கோணமலை, கொழும்பு முதலிய இடங்களிலும் வகுப்புகளைத் தொடங்க உத்தேசித்திருக்கிறது" என்று திரு. சச்சிதானந்தம் தெரிவித்தார்.

## 'எருமை தீவு காணிகட்கு விதிவிலக்களிக்குக'

காத்நாள்குடி, வெள்ளி

'தற்போலதய வரவுசெலவுத் திட்டத்திலுள்ள நிலவரி மானவாரிச் செய்கைப் பூமிக்கும், பிரதானமாக எருமை தீவுப் பகுதியிலுள்ள சகல நெற்காணிகளும் இச் சட்டத்திற்குள் அடங்குவதால், எருமைதீவுக் கண்டக்காணிகட்கு வரிச் சட்டத்திலிருந்து விதிவிலக்களிக்கப்படவேண்டும். ஏனெனில் எருமைதீவு, மட்டக்களப்பு, உப்பாற்றல் சூழப்பட்டிருப்பதால் வருடாவருடம் நீர் பெருகி வேளாண்மைப் பயிரைச் சேதப்படுத்துகிறது. இதனால் கமக்காரர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்'.

இவ்வாறு சமீபத்தில் நடந்த வதேறிய மண்முனை வடகிழக்கு டபகுதிக் கிராமச் சபையில்கு தீர்மானிக்கப்பட்டது.

இப்பிரேரணையை திரு. கா. நல்லரத்தினம் பிரேரிக்க திரு. க. செல்லத்தம்பி ஆமோதித்தார். பிரேரணை விவசாய அமைச்சருக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த விசேடக் கூட்டத்துக்கு கிராமச்சபைத் தலைவர் திரு. க செல்லத்தம்பி தலைமை தாங்கினர்.

## வருமானவரி கமிஷன் அறிக்கை தயார்

கொழும்பு, திங்கள்

உள்நாட்டு வருமானவரி இலாகா பிரிவுபடுத்தும் திட்டம் பற்றி அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும்படி நியமிக்கப்பட்ட கமிட்டி, குறித்த அறிக்கையைத் தயார் செய்துள்ளது. விரைவில் இக்கமிட்டி நிதி மந்திரியிடம் இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

உள்நாட்டு வருமானவரிக் கமிஷனர் திரு. எஸ். சிற்றம்பலம் உட்பட இக்கமிட்டியில் நால்வர் அங்கத்தவர்களாவர். இவர்களில் இருவர் வெளிநாட்டு வரிவிதிப்பு நிபுணர்கள். மற்றையவர் திறைசேரியில் கடமையாற்றி வரும் சிவில் சேவையாளர் திரு. ஏ. எல். பெரேரா ஆவர்.

வருமானவரி இலாகா பிரிவுபடுத்தும் புதிய திட்டத்தின் கீழ், பல மாவட்ட நகரங்களிலும் வரிமதிப்பிடுபவர்களைக் கடமையாற்ற விடுவது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனல் அந்தந்த மாவட்டத்திலுள்ளவர்களது வருமான வரிகளை அவர்களின் சொந்த இடங்களிலேயே வசூலித்துக் கொள்ள ஏதுவாய் இருக்கும்.த

த யார்கள் தமது வருமான வரியைச் செலுத்தத்தவறும் வழக்கத்தை ஒழிக்கும் நோக்கத்துடனேயே உள்நாட்டு வருமான வரி இலாகா பிரிவுபடுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

## லாவோஸ் நிலைமை

### கென்னடியிடம் ஹரிமன் தெரிவிப்பார்

நியுயோர்க். அக். 2

லாவோஸ் நிலைமை பற்றி திரு. அவரேல் ஹரிமன் இன்று அமெரிக்க ஜனதிபதி கென்னடியிடம் தெரிவிப்பார். ஜெனிவாவில் நடைபெறும் லாவோசுக்கான சர்வதேசக் கமிஷன் மகாநாட்டில் அமெரிக்காவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திரு. ஹரிமன் சமீபத்தில் லாவோசுக்கும் பர்மாவுக்கும் சென்று லாவோசின் முத்தரப்புத் தலைவர்களையும் சந்தித்து கலப்பு அரசாங்கம் அமைப்பது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். புதுடில்லிக்குச் சென்று திரு. நேருவையும் அவர் சந்தித்துப் பேசினர்.

இப்பேச்சுவார்த்தைகள் பற்றி ஜனதிபதி கென்னடியிடம் திரு. ஹரிமன் தெரிவிப்பார்.

## ஹமர்ஷீல்ட் நினைவில் ஆராய்ச்சிக் கழகம்

ஸ்டாக்ஹோம், அக். 1

காலஞ்சென்ற ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் கொள்கைகளுடன் இணைந்த சர்வதேச ஆராய்ச்சிக்கழகமொன்றை உப்சலா என்ற இடத்தில் நிறுவுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சிக் கழகத்தில் 140 அந்நிய விஞ்ஞானிகளும் அவர்களுடைய குடும்பங்களும் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்வதற்கு இடவசதியிருக்கும்.

# பீடிப் புகையிலைச் செய்கை விருத்திசெய்ய வேண்டுகோள்

## கூட்டுறவுச் சமாஜம் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"முன்னொருபோதுமில்லாத முறையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனை நிமிர்த்த வேண்டுமானல் சிகரெட் புகையிலை உற்பத்தியைச் சிறந்த வகையில் கவனிப்பதுமொன்ருகும். பீடிப் புகையிலை பற்றி சென்ற வருடங்களில் யோசிக்கப்பட்ட போது உத்தரவாத விலையில்லாதபடியால் விற்பனை செய்ய முடியாது கஷ்டமுண்டாகலாம் என்றெண்ணிக் கைவிடப்பட்டது. இப்போது இலங்கையில் பல பீடித்தொழிற்சாலைகள் தோன்றியதால் இந்திய பீடி இறக்குமதி குறைந்து உள்ளூர்ப் பீடிப் புகையிலைக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதன் உத்தரவாத விலையும் குறைவாயுள்ளது. பீடிப்புகையிலை செய்வது யாழ்ப்பாணக் கமக்காரருக்கு இலகு. அத்துடன் உலர்த்துவதும் சுலபம். ஆகையால் இனி பீடிப்புகையிலைச் செய்கை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது."

இவ்வாறு யாழ்ப்பாணம் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச 3-வது வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ. நா. துருப்புகள் இரண்டு இடத்திலிருந்து வாபஸ்

எலிசபெத்வில்லி, அக். 2

எலிசபெத்வில்லியில் இரண்டு இடங்களிலிருந்து ஐ. நா. துருப்புக்கள் வாபஸ்பெறப்படுகின்றன.

நகர ஆஸ்பத்திரியிலிருந்தும் துருப்புக்களை வாபஸ்பெற்றுக் கொள்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாக கடாங்காவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி டாக்டர் ஒபிரியன் தெரிவித்தார்.

எலிசபெத்வில்லி தபால்நிலையத்திலிருந்தும் வானொலி நிலையத்திலிருந்தும் ஐ. நா. துருப்புக்கள் வாபஸாக மாட்டா என்று அறிவிக்கப்பட்டது.

## காங்கோவில் அம்மை நோய்

லியப்போல்ட்வில்லி, அக். 1

லியப்போல்ட்வில்லிப் பகுதியிலுள்ள நான்குபேர் அம்மை நோயினல் காலமானர்கள். மற்றும் எட்டுப்பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது.

# உணவு உற்பத்தியைவிட ஜனத்தொகை அதிகரிக்கிறது

ரோம், அக். 1

உணவு உற்பத்தியை விட உலக ஜனத்தொகை சென்ற வருடத்தில் பெருமளவில் அதிகரித்துள்ளதென்று ஐ நா. உணவு விவசாய ஸ்தாபனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1960 - 61ம் வருடத்தில் உணவு உற்பத்தியில் சிறிதளவு அதிகரித்துள்ளதென்றும் இது அதற்கு முந்திய வருட உற்பத்தியை விட ஒரு சத வீதத்துக்கு அதிகமில்லை யென்றும் அந்த ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது. இதில் நவசீன சேர்க்கப்படவில்லை.

இது, வருடத்துக்கு 1 . 6 சத வீதம் அதிகரித்துவரும் உலக ஜனத்தொகையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதென்று அந்த அறிக்கை கூறுகிறது. கடந்த இரண்டு போகங்களையும் பொறுத்தவரையில் உணவு உற்பத்தி, ஜனத்தொகைப் பெருக்கத்தைவிட சிறிது அதிகரித்துள்ளதென்றும் அறிக்கை தெரிவித்துள்ளது.

இப்பொழுது உள்ள மதிப்பீட்டின்படி 1961 - 62ம் வருட உணவு உற்பத்தி மிகவும் குறைவாகவே இருக்குமென்று அந்த அறிக்கை கூறுகிறது.

## 5 கிழக்கு ஜேர்மன் பொலிசார்

### மேற்கு ஜேர்மனிக்கு தப்பி ஓடினர்

லண்டன், அக். 2.

கிழக்கு மேற்கு ஜேர்மன் எல்லையில் அமெரிக்க ரோந்துப் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு கிழக்கு ஜேர்மனியிலுள்ள சோவியத் அதிகாரி எச்சரித்துள்ளார்.

இது ஆட்சேபமல்லவென்றும் இது ஒரு எச்சரிக்கை யென்றும் கிழக்கு ஜேர்மனியிலுள்ள சோவியத் தளபதி தெரிவித்தார்.

இதற்கிடையில் சென்ற சனிக்கிழமை கிழக்கு ஜேர்மனைச் சேர்ந்த ஐந்து பொலிஸ்காரரும் மற்றும் 18 பேரும் கிழக்கு ஜேர்மனியிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு தப்பித்து ஓடிவந்துவிட்டதாக மேற்கு ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "சமாதானமே சீனவின் கொள்கை"

### சூ. என். லாய் கூறுகிருர்

பீக்கிங், அக். 1

"அமெரிக்கா உட்பட உலகின் சகல நாடுகளுடனும் சமாதானமாக வாழவே சீன விரும்புகிறது" என்று நவசீனப் பிரதமர் திரு. சூ. என். லாய் கூறினர்.

சீனக் குடியரசின் 12-வது ஆண்டு தேசிய தின விழாக் கொண்டாட்டத்தை யொட்டி நடைபெற்ற ஒரு உபசாரவைபவத்தில் பேசகையிலேயே திரு. சூ. என். லாய் மேற்கண்டவாறு கூறினர்.

"என்றாலும் இன்றுவரை சீனவுக்கு எதிரான பகை நடவடிக்கையை அமெரிக்கா இன்னும் நிறுத்திக்கொள்ளவில்லை" என்று சீனப்பிரதமர் சொன்னர்.

"சீனக்குடியரசின் சட்டபூர்வமான உரிமைகள் ஐ. நா. வில் அளிக்கப்படவேண்டும். சியாங்கைஷேக் கோஷ்டி ஐ. நா. விலிருந்து வெளியேற்றப்படவேண்டும்" என்று திரு. சூ. என். லாய் கூறினர்.

டுனிஸ். அக். 2

பிஸர்ட்டா சம்பந்தமாக பிரஞ்சு துருப்புக்களுக்கும் டுனிஷியத் துருப்புக்களுக்கும் சென்ற ஜூலை மாதத்தில் சண்டை ஏற்படுவதற்கு முன்னர் இரு தரப்புத் துருப்புக்களும் இருந்த பழைய நிலைகளுக்கு இரு தரப்பினரும் திரும்பும் வேலை நேற்றுக் காலையில் ஆரம்பமானது.

## மணி வாக்கு

அஹிம்சையைக் கடைப்பிடித்து சத்தியத்தை நாடுபவன், மற்றமதங்களில் உள்ள குறைகளைப்பற்றி ஆராயமாட்டான்

— காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 17 உ (3-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegarms EELA NADU Jaffna Phone: 389.


## நல்ல யோசனை

அகில இலங்கை ஆயுர்வேத காங்கிரஸின் 33-வது மகாநாட்டில், அதன் தலைவர் ஸ்ரீ ஒவிட்டிகல குணசேகரா நல்லதோர் யோசனை கூறியிருக்கிறார். மேற்கத்திய வைத்திய முறை டாக்டர்கள் ஆயுர்வேத முறையையும் பயின்று, தேவையானபோது அதைப் பயன்படுத்தினால் அவர்களுக்கே நல்லது என்று தெரிவிக்கின்றார். இந்த யோசனையைக் கேட்டு அலோபதி எனும் மேற்கத்திய வைத்திய முறை டாக்டர்கள், அதன்படி நடப்பின், அது அவர்களுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் நன்மையாகும்.

மேற்கத்தி வைத்திய முறை பயின்றவர்களிடையே பொதுவாக ஒரு உயர்வு மனப்பிராந்தியுண்டு. ஆயுர்வேதம், சித்தம், யுனானி முதலிய வைத்தியர்களைவிட, தாங்கள் உயர்ந்த சாதியினரென்றும், மேற்குறித்த நாட்டு வைத்தியர்களுடனோ, வைத்தியத்துடனோ எவ்வித உறவும் வைத்துக்கொள்வது தங்களுக்கு இழுக்கென்றும் நினைத்து, ஒதுங்கி வாழ்வதைப் பார்க்கிறோம். இதில் சிலர் விலக்காக இருக்கலாம். என்றாலும், மேற்குறித்த உயர்வு மனப்பிராந்திய காரணமாக அவர்களில் பலரும் ஸ்ரீ குணசேகராவின் யோசனையைக் கேட்டு, தாங்களாக ஆயுர்வேதம் பயிலுவார்களா என்பது சந்தேகமே.

அரசாங்க ஆதரவு இல்லாத காலத்திலும், நமது நாட்டு வைத்தியர்கள் மக்களின் நோய்களைக் குணப்படுத்தி வரும் பெரும் பணியைச் செய்து வந்துள்ளனர். இப்போது ஆயுர்வேதம் முதலிய நம் நாட்டு வைத்திய முறைகளுக்கு அரசாங்க ஆதரவு அதிகரித்து, சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் நாட்டு வைத்தியம் முன்னேறி, மக்களுக்கு மேலான சேவையைச் செய்யக்கூடிய வாய்ப்பு அதிகமுண்டு. பொது மக்களுக்கு நாட்டு வைத்தியத்திலும் நாட்டு வைத்தியர்களிடத்திலும் அதிக நம்பிக்கையுள்ளது வெளிப்படை. மேற்கத்தி டாக்டர்கள் குணப்படுத்த முடியாத பல நோய்களை நாட்டு வைத்தியம் குணப்படுத்தியுள்ளது பலரது அனுபவம். மேற்கத்தி வைத்தியம் நவீன முறைகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவது உண்மை. ஆனால் இது காரணமாக நம்நாட்டு வைத்திய முறைகள் மட்டமானவை என்றோ பயனற்றவை என்றோ கூற முடியாது. நாட்டு வைத்தியத்துக்கும் சமசந்தர்ப்பளித்தால், நாட்டு வைத்திய முறையும் அபிவிருத்தியடைந்து மக்களுக்கு மேலும் தொண்டாற்றலாம்.

மேல் நாட்டு வைத்திய முறை பயின்றவர்களில் சிலர் நமது நாட்டு வைத்தியமும் கற்று, பொது மக்களின் பெருநம்பிக்கையைப் பெற்றும், தொண்டாற்றுவதைப் பார்க்கின்றோம். ஆனால் நாட்டு வைத்தியத்தைப் பயில அவர்களில் பலருக்கு நல்ல வாய்ப்பில்லை. ஆகவே வைத்தியக் கல்லூரிகளிலேயே ஆயுர்வேதம் முதலிய நாட்டு வைத்திய முறைகளையும் ஒரு பாடமாகக் கற்க வாய்ப்பளித்தால், இதுபற்றி இருந்துவரும் மனப்பிராந்திகள் நீங்கவும், வைத்திய சிகிச்சை மேம்படவும் கூடும். பல ஆஸ்பத்திரிகளிலும் நாட்டு வைத்திய மருந்துகளையும் வைத்து, அதன்படியும் சிகிச்சை செய்ய ஒழுங்கு செய்தால், பொது மக்களுக்கு மிகவும் நன்மையாவதுடன், டாக்டர்கள் இல்லாப் பஞ்சம் நீங்கவும், வைத்தியச் செலவுகள் குறையவும்கூட வழிபிறக்கும். சென்னையில் இவ்விஷயமாக சில நடவடிக்கை எடுத்ததாகத் தெரிகிறது. இலங்கை அரசாங்கம் இதுபற்றி விசாரித்து, இங்கும் பொதுமக்களுக்குப் பயன்படும்படியான சீர்திருத்தங்களைப் புகுத்துவது வரவேற்கத்தக்கதாகும்.

# தலைவர்கள் சீக்கிரத்தில் விடுதலையாவர்?

## ஆனால் அவசரகாலம் நீடிக்கலாம்

### 41 லட்சம் செலவு: சுவரை உயர்த்தியதேன்?: தகநாயக்காவிளக்கம்: "என்னை சிறைப்படுத்துங்கள்": உடுப்பிட்டி மெம்பர் பேச்சு: எதிர்க்கட்சிகள் ஏகோபித்த ஆதரவு: வெலிமடை இடைத் தேர்தல்; மூதூர் விஷயமென்ன?

— நமது அரசியல் நிருபர் —

அவசரகால பிரகடனத்தை நீக்க வேண்டுமென்று சமசமாஜக் கட்சியினர் சென்ற வாரம் பார்லிமெண்டில் கொண்டு வந்த பிரேரணை தோற்றது. 61 பேர் பாதகமாகவும் 41 பேர் சாதகமாகவும் வாக்களித்தனர். இது எதிர்பார்க்கப்பட்டதே. இந்த விவாதத்தின் போது தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் சபையில் இருந்தாலும் கூட, மெஜாரிட்டி பலமுள்ள அரசாங்கக் கட்சியை தோற்கடித்திருக்க முடியாது.

பிரேரணை தோற்றாலும், இது பற்றி சபையில் நடைபெற்ற விவாதம் ருசிகரமாக இருந்தது. சமசமாஜக் கட்சித் தலைவர் இப் பிரேரணையைப்பற்றிப் பேசுகையில் நாட்டில் அவசர நெருக்கடி எதுவுமில்லை யென்றும், ஆகவே இப் பிரகடனத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் கூறினார். "அவசர காலம் 165 நாட்களாக நீடிக்கப்பட்டு வருகிறது. சிலர் ஒருதிட்டமான கருத்து கொண்டிருப்பதாயும் அதை அவர்கள் மாற்றுதவரை அவசரகாலம் நீடிக்குமென்று வரவு செலவு திட்ட விவாதத்தில் நிதி மந்திரி கூறினார்".

"தங்கள் கோரிக்கைகளை தமிழரசுக் கடசி மாற்றிக்கொள்ளப் போவதில்லை. அப்படியாயின், இந்த அவசரகால நிலையும் காலவரையறையின்றி நீடிக்கப்போகின்றதா? ஜனநாயக உரிமைகளை இந்த அவசர காலம பறிக்கிறது. வங்கி குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தத்தை முறியடிக்க அவசர காலத்தை அரசாங்கம் பயன்படுத்தியது. அவசரகாலம் நீடிக்கும்வரை ஜனநாயகத்துக்கு ஆபத்து. சட்டமும் அமைதியும் ஒழுங்கும் நாட்டில் இருக்கும்வரை, அவசர காலத்தைத் தொடர்ந்து நீடிக்கவேண்டிய நியாயமே இல்லை" என்றார் டாக்டர் என். எம்.

அரசாங்கத்துக்கு பெரிய மெஜாரிட்டி பலம் இருப்பினும் இவ்வாண்டுக்குள் அது வீழ்ச்சியடையுமென்று எதிர்க்கட்சித் தலைவர் டட்லி சேனநாயகா கூறியதிலிருந்து, அரசாங்கத்துக்கு மாறாக ஒரு சதி நடப்பதாகத் தோன்றுவதாக, குருணாக்கலை மெம்பர் ஜயா பத்திரான கூறியதும், இந்த சதிக்கான அத்தாட்சிகள் உண்டா? என்று கேட்டார் டட்லி.

செனேட் சபையில்

இது பற்றி பேசியுள்ளதாயும் வகுப்புக் கலவரத்துக்கு யு. என். பி. தான் காரணமென்றும், அக் கட்சி தனது மொழிக்கொள்கையை வெளியிடவில்லை என்றும் பத்திரான கூறியதை டட்லி பலமாக மறுத்தார்.

தமிழரசுக்கட்சியும் வகுப்பு வேற்றுமைகளைக் கிளப்பிவிடுவதாயும், நாட்டில் கலவரம் ஏற்பட்டதும், வேறொரு நாட்டிலிருந்து உதவி பெற்று, பவாக்குத்தொடுவாய்க்கு அப்புறமுள்ள ஒரு நாட்டின் ஆதிக்கத்துக்கு இலங்கையை உட்படுத்த அவர்கள் விரும்புவதாயும், இது அனுமதிக்கப்பட முடியாதென்றும், அவசரகால நிலைமை நீடிப்பதற்கு இதுவும் ஒரு காரணமென்றும், அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ பத்திரான கூறினார். இதற்குப் பதிலளிக்க அங்கு எந்த தமிழரசு மெம்பர்களுமில்லை.

வகுப்புப் பிரச்சினை நீடிக்கும்வரையில், நாட்டின் முன்னேற்றம் தடைபடுமென்று ஒப்புக் கொண்டார் அவர். அரசாங்கம் அவசரகாலத்தை நீடிக்க வேண்டியிருந்தாலும் அதே சமயத்தில் மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டு பிடிக்க வேண்டியிருப்பதாயும், 1958ம் வருடம் ஏற்பட்ட இரத்தக்களறி மீண்டும் ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்றும் அவர் கூறி, நாடு சமதர்மத்தை நோக்கி முன்னேறுவதாயும் இதனால் மக்களுக்கு சம சந்தர்ப்பங்கள் கிடைத்து, சமுக சமரசம் ஏற்படவும் முடியுமென்றும், இதற்காக அவசரகால பிரகடனத்தை நீடிப்பது மேலாகுமென்றும் வாதித்தார்.

#### அவசரகாலச் செலவு

அவசரகாலத்துக்காக அரசாங்கத்துக்கு எவ்வளவு செலவாகிறது? ஏதோ "சில்லறை"ச் செலவு ஆவதாக சபை முதல்வர் கூறியிருந்ததை, காலி மெம்பர் ஞாபகப்படுத்திவிட்டு, "இரண்டு நாட்களுக்கு முன், அவசரகாலத்துக்காக சில மாதச் செலவுகளுக்கு ரூ. 41 லட்சத்து 70 ஆயிரத்து 821 உபமான்யம் கேட்டதும், விவாதம் எதுவுமின்றியே அது நிறைவேறிவிட்டது. இந்த தொகையைக் கொண்டு 20 மத்தியக் கல்லூரிகளை ஆரம்பிக்கலாம். அபிவிருத்தி திட்டங்களுக்கு பலமில்லாமல் சங்கடப்படும் அரசாங்கம், இவ்விதம் செலவுகள் செய்ய முடியாதென்றும் அவர் கூறினார்".

அரசாங்கத்தைக் கவிழ்க்க யாராவது முயன்றால் அவர்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தலாமென்றும் கூறினார்.

இச் சமயம் சபை முதல்வர் குறுக்கிட்டு "நீங்கள் ஏன் டெம்பிள்டிரீஸ் மாளிகை சுவரை உயர்த்தினீர்கள்" என்று கேட்டதும், காலி மெம்பர் தாம் அவ்விதமே செய்யவில்லை என்றும், அது பத்திரிகை செய்த பித்தலாட்டமென்றும், தண்ணீர் தொட்டியை பாதுகாக்கவே சுவர் உயர்த்தப்பட்டதென்றும் கூறிவிட்டு, தாம் தற்காலிக பிரதம மந்திரி பதவியை ஏற்றது தாம் செய்த ஒரு பெரிய தவறென்றும், திரு. செல்வநாயகத்துக்குச் செய்யப்பட்டது ஜனநாயகத்துக்கு மாறான காரியமென்றும் அரசாங்கம் உடனடியாக அவசரகாலத்தை நீக்குமென்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

புலத் சிங்கள மெம்பர் எட்மண்ட் சமரக்கொடி (சமசமாஜ) ஒரு முக்கிய கேள்வியைக் கேட்டார். அவசரகாலம் இப்போது நிலவுகிறதா? அல்லது ஏற்பட இருக்கிறதா? என்று கேட்டதற்கு, சபை முதல்வர் "அது ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது" என்றார். அரசாங்கம் சில மாதங்களுக்கு மேல் நீடிக்காதென்று சில அரசியல்வாதிகள் பொதுமேடைகளில் முழங்குவதைக் கேட்டு இப்படி அரசாங்கம் செய்கிறதா? அல்லது சில சோதிடர்களைக் கலந்தாலோசித்தா? என்று திரு. சமரக்கொடி கேட்டுவிட்டு, "மொழிப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் என்ன செய்கிறது? வடக்கு,கிழக்குமாகாணங்களில் அரசாங்கம் செய்த கொடும் செயல்கள் அப்பகுதி மக்களை சமஷ்டிக் கட்சியிடம் ஓடும்படி செய்துள்ளன. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் அளிக்கப்படவேண்டும்" என்று வற்புறுத்தினர்.

தமிழ் மெம்பர்கள் சபையில் இல்லாததால், தமிழ் மக்கள் கஷ்டப்படுவதாயும், உடனடியாக அவசரகாலத்தை நீக்க வேண்டுமென்றும் எதிர்க் கட்சி தலைவர் டட்லி சேனநாயக்கா கூறிவிட்டு, நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருதியே இந்த அரசாங்கம் 1962 ம் வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்துக்குமேல் கவிழ்ந்துவிடுமென்று தாம் கூறியதாயும் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீக்கியதும், சமஷ்டிக் கட்சியின் இயக்கம் நீடிக்குமென மெம்பர் கூறியதாயும் அதனால் அவசரகாலத்தை நீடிப்பது நியாயமே என்றும் உணவு மந்திரி இலங்கரத்ன வாதித்தார்.

அவிசாவலை பிரதிநிதி பிலிப் குணவர்த்தன, வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலவுவதால், அவசர காலச் சட்டத்தை ரத்துச் செய்யவேண்டுமென்றார்.

உடுப்பிட்டி மெம்பர் திரு எம். சிவசிதம்பரம் கூறியதாவது:-

"அவசரகாலச் சட்டம்பிரகடனம் செய்யப்பட்டு 5 மாதங்களாகின்றன. மொழிப் பிரச்சனையைத் தீர்க்க என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள்? நான் ஒரு சமயம் கூறியதை உணவு மந்திரி குறிப்பிட்டார். எனது அறிக்கையைக் கண்டு அரசாங்கம் அஞ்சுமானால் தயவு செய்து என்னைச் சிறைப்படுத்துங்கள். ஆனால் கடவுளின் பெயரால் சமஷ்டிக் கட்சித் தலைவர்களை விடுதலை செய்யுங்கள்" என்றார்.

(5ம் பக்கம் பார்க்க)

## ஜயாறன் எழுதுவது

நாடகம் பார்த்து நான் பல மாதங்கள், அல்ல, வருடங்களுமாகின்றன. முந்தாநாள் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் "இன்ப நாள்" என்ற ஒரு நாடகம் நடந்தது. அதைப் பார்த்தால், ஈழத்திலே நடிப்புத்திறமை எவ்வளவு இருக்கிறதென்பதையும், பல வசதிக் குறைகள் இருப்பினும், நாடகக் கலை எவ்வளவு உயர்தரமாக வளர்ந்திருக்கிறதென்பதையும் நேரில் அறிந்து மிக மகிழ்ச்சி அடைந்தேன்.

கலை அரசு சொர்ணலிங்கத்தாரைத் தலைவராகக்கொண்ட "ஓரியண்ட் ஸ்போட்ஸ், நுண்கலைச் சங்கத்தின் 20வது ஆண்டு விழாவிலேயே, இந்த நாடகமும் நடைபெற்றது.

மண்டபம் தாங்காமல் கூட்டம். பெண்மணிகளே அதிகம். நாடகம் இரவு 10-15 மணி வரை நடந்தது: கடைசிவரை யாரும் அசையாமல் இருந்து பார்த்தது குறிப்பிடத்தக்கது.

* * *

"இன்ப நாள்" என்பது ஒரு சமூகச் சித்திரம். ஒரு குமாஸ்தாவின் குடும்பம். அவருக்கு ஒரு பெண்ணும் ஒரு புதல்வனும். மனைவி இல்லை. அருமைப் பெண் கமலாவின் கல்யாணத்தைப் பற்றிய பிரச்சினையே நாடகம் அனைத்தும்

"ஒரு குடும்பம்மானத்தோடு வாழ வேண்டுமானால், அந்தக் குடும்பத்தில் ஒரு பெண் கூடப் பிறக்கக் கூடாது" என்பது கமலாவின் அண்ணன் ராமுவின் கருத்து.

ஆரம்ப முதல் கடைசிவரையில் கமலாவுக்கோ அக்குடும்பத்துக்கோ துன்பமே எந்நாளும் இன்பமில்லை. விவாகமானதுடன் பிரச்சினை அதிகமாகிவிட்டது. தாலிகட்டியவன் ஓடிவிடுகிறான். பாவம் கமலா படும் வேதனையைப் பார்த்தபோது, இப்படியும் இன்று சமூகத்தில் பல பெண்களின் நிலை இருப்பதாக நீதி அரசர் தம்பையா என்னிடம் கூறினார்.

எதிர் பாராத முறையிலே கடைசியாக எல்லாத் துன்பங்களும் தீர்ந்து அக் குடும்பத்துக்கும் "இன்ப நாள்" வருகிறது. கமலாவின் முகமும் சிரிப்புக் கண்டது.

தமிழ் குடும்பத்திலே திருமண பிரச்சினை காரணமாக பல பெண்களுக்குள்ள சங்கடங்களையும் இந் நாடகம் அம்பலப்படுத்தி, பொது மக்களின் கண்ணைத் திறந்து விடுவதாக இருக்கின்றது.

நாடகத்தில் ஒவ்வொருவரும் தங்களை மறந்து தத்ருபமாக நடித்தனர். அண்ணன் ராமு, ஆபீஸ் பொடியன் பொன்னுரங்கம் கமலா இவர்கள் என் கண் முன்னே இன்னும் நிற்கிறார்கள்.

கலை அரசால் தயாரிக்கப் பெற்றவர்கள், கேட்பானேன் என்றார் நண்பர்.

* * *

இதில் பெண்கள் சேர்ந்து நடிக்காததும், பாட்டு இல்லாததும் இரு பெரிய குறைகள் இவை, "பூதத்தம்பி" என்ற நாடகத்தில் நிறையாகிவிடுமென்றும் அது வேகமாகத் தயாராகி வருவதாயும் கலை அரசு மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 20 வருடமாக நாடகக் கலையையும், பல விளையாட்டுகளையும் வளர்த்து வரும், நுண்கலைச் சங்கத்தாரை பாராட்டுகிறேன்.

# "கல்வியில் ஆதிக்கம் இருப்பது அபாயம் விளைவிக்கும்"

## தலைமை ஆசிரியர்கள் மகாநாட்டில் தலைவர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் தலைமை ஆசிரியர் மகாநாடு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சனிக்கிழமையன்று நடைபெற்றது. இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். அகில இலங்கை ஆசிரியர் மகாநாட்டுத் தலைவர் திரு. சி. ஜே. ஓர்ஹாப் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டதாவது:

"கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நீர்கொழும்பில் நாம் கூடியபோது எதுவித மனத்திடமும் இல்லாத சூழ் நிலை எம்மைக் குடிகொண்டிருந்தது. பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் அரசாங்கம் எடுக்கப் போகிறது என்று பீதிகொண்டிருந்தோம். சென்ற ஆண்டு டிசம்பர் 1-ந் திகதி ஒரு சில பள்ளிக்கூடங்களைவிட மற்றைய பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்தது. பல கஷ்டங்களுக்கிடையிலும் தனித்தியங்க விரும்பி ஒரு சில பள்ளிக்கூடங்கள் அவ்வாறிருந்து வந்தன.

பாடசாலைகள் தனித்தியங்கும் உரிமையை வழங்கி, ஆனால் வசதிக்கட்டணம் பெறும் உரிமையை வழங்காதமை பொருத்த மற்ற செயலாகும். 1951இல் இப்பள்ளிக்கூடங்கள் இலவசக் கல்விச் சட்டத்தை ஏற்றுக்கொண்டன. எனவே அவை கட்டணம் எதையும் மாணவர்களிடம் வசூலிக்கக் கூடாது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அரசாங்கம் வழங்கி வந்த உதவி கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடனே இப்பள்ளிக்கூடங்கள் 1951-ல் அச்சட்டத்தை ஏற்றன.

நாட்டின் கல்விப்பொறுப்பை அரசாங்கமும் தனி ஸ்தாபனங்களும் ஏற்று நடத்துவதுதான் நற்பயனை விளைவிக்கும் என பல நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கல்வியில் எதுவித தனி உரிமையோ ஆதிக்கமோ அபாயம் விளைவிக்கும் என்பதும் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை.

ஆசிரிய மாணவ தொடர்பும் ஆசிரியர்களுக்கிடையே உள்ள தொடர்பும், ஆசிரியர்களுக்கும் தலைமை யாசிரியருக்குமிடையே உள்ள தொடர்புகளும் தான் பள்ளிக்கூட விவகாரங்களில் முக்கியமானவை. ஆசிரியர்களையும் பிள்ளைகளையும் தேர்ந்து எடுக்கும் வாய்ப்பு தலைமை ஆசிரியருக்கு இருக்கும் வரை மேற்படி தொடர்புகளும், உறவுகளும் நல்லவையாக இருக்கும் என்பதை யாரும் ஏற்றுக்கொள்வர். பள்ளிக்கூடத்துடன் நேரடியான தொடர்பு எதுவும் இல்லாத அதிகாரியொருவர் கையில் ஆசிரிய நியமனங்கள் இருக்கும்வரை பரஸ்பர உறவு நிலைக்குமா என்பது சந்தேகம் தான்.

1960-ம் ஆண்டுச் சட்டம் பள்ளிக்கூடங்கள் தனித்தியங்க அனுமதியளிக்கிறது. ஆனால் அனுமதி மட்டும் போதாது. கட்டணம் பெற்றுக் கொள்வதற்கு அவற்றிற்கு உரிமையளித்தால்தான் அவை இயங்க முடியும். எனவே அவர்கள் தமக்குப் பணம் தேடிக்கொள்ள அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும். அத்தோடு அவர்கள் மீது அரசாங்கம் கஷ்டங்களையும் சுமத்தக்கூடாது. சட்டத்தின்படி பிள்ளைகளை அனுமதிக்கும் இப்பள்ளிக்கூடங்கள் மேலதிகமான ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கவேண்டிய பொறுப்புடையன. அரசாங்க பள்ளிக்கூடங்கள் போலவே தனித்தியங்கும் பள்ளிக்கூடங்களும் நாட்டுக்குச் சேவை செய்து வருவதால் இவற்றிற்கு பங்கு எதுவும் விளைவிக்காது அரசாங்கம் உதவி செய்து வரவேண்டும்.

விமர்சனம் செய்வது அடங்காத்தனம் என்று விருத்தியடையா நாடு ஒன்றிலுள்ள சிந்தனையற்றோர் கருதுவர். விமர்சனம் செய்வதும் கீழ்ப்படிவுத் தன்மையும் ஒன்றுக்கொன்று முரணில்லாதவை என்று நான் வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன். விமர்சனம் செய்யத் தயங்குவதே கீழ்ப்படியாமைக்கு வழிவகுக்கும்.

விசேஷ அம்சங்கள் உள்ள பள்ளிக்கூடங்கள் தமது விசேஷ அம்சங்களுடன் நிலைக்க வாய்ப்பளிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களில் விடுதிகள் கொண்டு நடத்தப்பட வேண்டும்.

வெவ்வேறு இன மக்களும் வாழும் பகுதிகளில் ஒரே பள்ளிக்கூடத்தில் பல இனப் பிள்ளைகளும் படிக்க வசதி செய்ய வேண்டும். மொழி காரணமாக மாணவர்கள் வேறுபடுத்தப்பட்டுக் கல்வி அளிக்கப்பட்டு வருவது தேசிய ஒற்றுமைக்கு முட்டுக்கட்டை போடுவதாகும். யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள பள்ளிக்கூடத்தை தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றுடன் இணைக்கலாம்,

பள்ளிகூடங்கள் யாவும் பண்பும் பயனும் உள்ளவையாக இருக்கவேண்டும். றோயல் கல்லூரி ஒன்றுதான் அப்பேற்பட்ட பள்ளிக்கூடம். ஆசிரியர்களுக்குப் பிரத்தியேக சம்பளம் அங்கு வழங்கப்பட்டு வருவதால் அங்கு வேலையில் ஸ்திரமும் தொடர்ச்சியுமுண்டு. பண்பும் பயனும் வளர்ப்பதற்கு இவையே தேவை.

ஜி. ஸி. ஈ. பரீட்சையில் 5 அல்லது 6 பாடங்களில் சித்தியடையும் எவரும் எதுவித பயிற்சியும் இன்றி இந்நாட்டில் ஆசிரியராக முடியும். நிதி நிலைமைகள் ஆசிரிய நியமனங்களைப்பாதிக்காது இருக்கவேண்டும்.

தேசிய கல்விக் கமிஷனுக்கு அதிகம் பொறுப்பு உண்டு. தனி மனிதர்களது குரலைக் கேட்பதற்கு கல்விக் கமிஷன் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. எனினும் கல்வி ஸ்தாபனங்களுடன் மேவி அது கல்வித் திட்டங்களை அகுத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

1960, 1961-ம் ஆண்டு சட்டங்கள் எவருடனும் கலந்தாலோசிக்காமலே நிறுவப்பட்டவை. பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பள்ளிக்கூட அதிபர்களையும் சிறிதளவேனும் கலந்தாலோசிக்காது பாடத் திட்டங்கள் மாற்றப்படுகின்றன. பகிரங்கப் பரீட்சைகள் மாற்றப்படுகின்றன. இப்படியான மாற்றங்கள் செய்யும் முன்னர் குறிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என இம்மகாநாடு வலியுறுத்துகிறது. மாணவர்கள் பகிரங்கப் பரீட்சைகளுக்குப் படிப்படியாகப் பயில வேண்டுமாகையால் புத்தகங்களிலோ அல்லது பாடத் திட்டங்களிலோ ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றி இரண்டு ஆண்டுகள் முன்னறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும் எனவும் இம்மகாநாடு வலியுறுத்துகிறது.

கடைசியாகத் தேசிய ஒற்றுமை பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவேண்டும். சகல இனத்தவரும் கொண்ட இந்தத் தலைமையாசிரியர் மகாநாடு ஒரே தேசிய ஒற்றுமைக்கு மனமிருந்தால் இடம் உண்டு என்னும் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. இம்மகாநாட்டு அங்கத்தவர்கள் நினைத்தால் ஒவ்வொரு மாணவ மாணவியும் இரு தேசிய மொழிகளையும் கற்க வைத்தல் முடியும். சரித்திரம், உடற் கூறு சாஸ்திரம், சமயம், சமூகவியல் ஆகிய பாடங்களின் மூலம் மனித சாதி எல்லாம் ஒன்று என்றும், இனவேறுபாடு இடையிட்டு வந்ததென்றும் பிள்ளைகளுக்கு எடுத்து அறிவுறுத்தலாம். எமது மகாநாடு பள்ளிக்கூடங்களில் வெவ்வேறு இனத்தவர்களின் மொழிகளையும் அரசாங்கம் புகுத்தவேண்டும் என கோருகிறது. கோரிக்கைகள் தீர்மானங்கள் மட்டும் போதாது. அரசாங்கம் எம்மை பொறுப்புடைய பிரஜைகள் எனக் கருதுகிறது. இருஇனத்தவர்களையும் ஒன்று சேர்க்க நாம் செய்யக்கூடிய எதையும் செய்ய வேண்டும். இரு இனத்தவரும் இந்நாட்டைத் தமது தாய்நாடாகக் கொள்கிறார்கள். இரு இனத்தவர்களையும் ஒன்று சேர்ப்பதற்கு எமது பள்ளிக்கூடங்களில் ஏதாவது ஒரு வழியை நாம் செய்வோம் என்று தீர்மானம் செய்தோமானால் அதுவே இம்மகாநாட்டின் மகத்தான பேறாகும்."

---

## தலைவர்கள் சீக்கிரத்தில்..

(4ம் பக்கத்தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் விக்கிரமசிங்காவும் பிரேரணையைப் பலமாக ஆதரித்தார். எதிர்க் கட்சிகளெல்லாம் ஏகோபித்து, இப்பிரேரணையை ஆதரித்தது குறிப்பிடத்தக்கது.

சபைமுதல்வர் விவாதத்துக்கு பதிலளிக்கையில், அவசரகாலச் சட்டத்தை நீக்குவதுபற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் மேலும் பல தடைவிதிகள் நீக்கப்படுவதைப்பற்றி ஆலோசித்துவருவதாயும் சமஷ்டிக் கட்சி எம். பிக்கள் மிக விரைவில் சபையிலே மீண்டும் பிரசன்னமாயிருப்பரென்று எதிர்பார்ப்பதாயும் தெரிவித்தார்.

அவசரகாலத்தை நீக்காவிடினும், தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் வெகு சீக்கிரத்தில் விடுதலை செய்யப்படுவரென்றும் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கவும் புதிய முயற்சிகள் செய்யப்படலாமென்றும் நம்பிக்கை பலப்பட்டுள்ளது. பிரேரணையை யாழ்ப்பாண மெம்பர் துரையப்பாவுள்ளிட்டு எதிர்க் கட்சியினரனைவரும் ஆதரித்தது குறிப்பிடத்தக்கது.

* * *

வெளிமடை உபதேர்தலுக்கு இம்மாதம் 18ந் திகதி நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவேண்டும். அரசாங்கக்கட்சி, யு. என். பி., ஜாதிக விமுக்தி பெரமுன உள்ளிட்டு, 5 கட்சிகள், கட்சி கட்டணப் பண சலுகை கேட்டுள்ளன. ஆனால் இக்கட்சிகள் ஐந்தும் போட்டியிடுமா? கே. எம். பி. ராஜரத்ன அதற்கிடையே விடுவிக்கப்படுவாரா? அவர் தேர்தலுக்கு நிற்க முடியுமா? என்பதுபற்றி அரசியல் வட்டாரங்களில் கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

மூதூர் தொகுதியிலும் சீக்கிரத்தில் உபதேர்தல் நடைபெறலாமென்று அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டது. எப்போது நடைபெறுமென்பது இதுவரை திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. வெளிமடைக்கு நியமனத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதால், மூதூர் உபதேர்தலும் இனி அதிகநாள் ஒத்திப்போட நியாயமில்லை.

---

## விக்னேஸ்வராவில் பாரதி விழா

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர் மன்றம் நேற்றைய தினம் தலைவர் திரு வீ. இரத்தினசிங்கம் தலைமையில் பாரதி விழாவை கொண்டாடிய பொழுது செல்வன் சிவஞானசுந்தரம், பாலசுப்பிரமணியம், இராஜேந்திரம் ஆகியோர் சுவையான கருத்தரங்கம் ஒன்றிற் கலந்துகொள்வர்.

# "இறைவனை உள்ளத்தில் காணவேண்டும்"

## யோகிராஜ் சச்சிதானந்தா உபதேசம்

மாவிட்டபுரம், திங்கள்

"இறைவனை எங்கும் பார்க்கும் நிலைதான் தெய்வீகக் காட்சி. கண் எப்படியோ அப்படியேகாட்சியும். தெய்வீகக் கண்பெற்றோர் காட்சியும் தெய்வீகமாகும்" என்று யோகிராஜ்சச்சிதானந்தா நேற்று மாலை கட்டுவன் சந்தி ஞானோதய வித்தியாசாலையில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலை விளான் இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சமயப் பிரசாரக் கூட்டத்தில் சுவாமி சச்சிதானந்தா 'தெய்வீகக் காட்சி' என்னும் பொருள்பற்றிப் பேசினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

உலகு வேறு இறைவன் வேறன்று. உலகை வேறு காண்பது காட்சியின் குற்றம். உலகம் பொல்லாததல்ல. உள்ளமே பொல்லாதது. உள்ளம் உலகத்தை கடவுளின் வேறாகக் காண்கிறது. உள்ளத்தின் அழுக்கு நீங்க உலக அழுக்கு நீங்கும். உள்ளத்திலிருக்கும் அருட்சோதி களங்கமற்றது. உலகமும் களங்கமற்றது. இடையிலுள்ள மனச்சுருளின் களங்கமே உலகத்தைக் களங்கமாகக் காட்டுகிறது. மனந் திருந்தப் புலன் திருந்தும். உள்ளம் பொல்லாதது என்கின்றேன். உலகம் பொல்லாததல்ல. உன்னை அளந்து உலகத்தை அள. நன்றும் தீதும் பிறர்தரவரா, விதைத்ததே முளைக்கும்; நல்லவனுக்கெல்லாம் நல்லது. அல்லவனுக் கெல்லாம் அல்லது. தெய்வத்தை நமக்குள்ளே காணவேண்டும். கோயிலில் கடவுளைக் காணவேண்டுமாயின்வு தெய்வத்தை உள்ளத்தேகொண்டு போக வேண்டும். கல்லிலும் செம்பிலும் இருப்பவனே எங்கள் கண்ணுதலே. கடவுளை உள்ளே தேடு. உதட்டிலே முருகன் வேண்டாம் உள்ளத்திலே முருகன் வேண்டும்.

கூட்டத்திற்குப் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் "உலகம் அழிவுப் பாதையிற் செல்கிறது. அறம் தவறின் அழிவு நிச்சயம். அறம் தவறுகின்ற போது அதனை நிலைநிறுத்துகின்ற சக்தியும் விரைவாக இயங்குவது இயல்பு" என்றார்.

'பெண்களும் சமயப் பணியும்" என்னும் பொருள் பற்றிச் செல்வி இராஜலட்சுமி சின்னத்தம்பி பேசுகையில் "பெண்கள் சக்தியின் வடிவம் சக்தியாற்றான் உலகம் இயங்குகின்றது" என்றார்.

---

தனியூற்று

# கொலை நடந்த இடத்துக்கு கோர்ட்டார் செல்வர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தனியூற்று கொலை நடைபெற்ற இடத்தை இன்று காலை 9 மணிக்கு நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா, ஜூரிகள், வழக்கறிஞர்கள் ஆகியோரும் சென்று பார்வையிடுவர்.

1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் திகதி வவுனியா தனியூற்று என்னுமிடத்தில் மரியாம்பிள்ளை கந்தாமி என்பவரைக் கொலைசெய்ததாகச் செல்லப்பா செல்லத்துரை என்பவர்மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு நேற்று மீண்டும் வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கின் முக்கிய சாட்சியாக முதலில் அழைக்கப்பட்ட தனியூற்றில் தேநீர்க் கடை நடத்தும் சுப்பர் வல்லிபுரம் என்பவர் நேற்று இரண்டாவது நாளாக எதிரிதரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

இவ் விசாரணையின் போது சம்பவம் நடைபெற்ற இடத்தை இன்று காலை 9 மணிக்குச் சென்று பார்வையிடுவதென நீதியரசர் தெரிவித்தார்.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானார். எதிரிதரப்பில் திரு. டி. கணேசலிங்கம், திருவாளர்கள் எஸ். கே. திரவியநாயகம், ரி. கனகசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். திரு. கே. நாகராசா எதிரிதரப்பில் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

---

## ஆஸ்பத்திரிக்கு முன் திடீர் மரணம்

மாவிட்டபுரம், திங்கள்

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையுமான 45 வயது நிரம்பிய கந்தையா சுப்பிரமணியம் என்பவர் காங்கேசந்துறை ஆஸ்பத்திரி வளவில் வசிக்கும் தனது சகோதரியைப் பார்க்க வந்த சமயத்தில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் விழுந்து திடீரென மரணமானார்.

டாக்டர் திருமதி அருளம்பலம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

காங்கேசந்துறை பொலிஸ் சார்ஜன்ட் செல்வரத்தினம் சாட்சிகளை மரண விசாரணை அதிகாரி திரு. கே. பூதப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தார்.

மரண விசாரணை அதிகாரி தனது தீர்ப்பில் இருதயம் திடீரென நின்றபடியால் மரணம் சம்பவித்ததெனக் கூறினார்.

---

## ஸ்தல ஸ்தாபன நிதி குறைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

கிராம அபிவிருத்தி வேலைகளுக்கென ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு மத்திய அரசாங்கம் வழங்கிவரும் பணத்தொகை குறைக்கப்படவிருக்கிறது. தமது பகுதிகளிலுள்ள நிலங்களின்மீது மேலதிகமான காணிவரி வசூலிப்பதற்கு தலஸ்தாபன சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதனாலேயே மத்திய அரசாங்கம் உதவும் பணத்தொகை குறைக்கப்படவிருக்கிறது.

உள்நாட்டு வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள புதிய சட்டத்தின்கீழ், ஏக்கர் ஒன்றுக்கு 50 சதத்திலிருந்து 2 ரூபாயாகக் காணிவரி அதிகரிக்கப்பட்டுள்ளது என உள்நாட்டு வீடமைப்பு இலாகா அதிகாரியொருவர் கூறியுள்ளார். இவ்வரி அதிகரிப்பு, தோட்டப்பகுதிகளிலுள்ள தலஸ்தாபன சபைகளின் வருவாயை மிகவும் அதிகரிக்கச் செய்யும் என அவ்வதிகாரி கூறியுள்ளார்.

வருடாந்தம் சுமார் 500,000 ரூபாயை மத்திய அரசாங்கம் கிராம அபிவிருத்திக்கெனத் தலஸ்தாபன சபைகளுக்கு வழங்கி வந்தது. புதிய வரி விதிப்புத் திட்டத்தின் பின்னர் இத்தொகையை மத்திய அரசாங்கம் நன்கு குறைக்கவிருக்கிறது.

# 'தகுதியற்றவர் பெருமை தேடுவதால் சமுகத்தில் சந்தேகம் ஏற்படுகிறது'

## பாராட்டு விழாவில் எழுத்தாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பரிசைப் பெற்றவர் பாராட்டப்படும் போது அவருக்குப் பரிசளிக்கத் தீர்மானித்த நீதிபதியார், அப்பரிசை வழங்க அமைந்த உத்தியோகத்தர் யார், பரிசைப் பெறுவதற்கு யார் யாரையெல்லாம் கண்டார்கள் என்றெல்லாம் ஆராய்வார்கள் தகுதியுடையவர் தான் பரிசுக்குரியவராகிருர் என்பதில் சமூகத்திலே சந்தேகமிருக்கிறது. இதற்குக் காரணம் சமூகத்திலேயுள்ள குறைபாடென்றே சொல்லவேண்டும். தகுதியுள்ளவர்கள் பெருமை தேடி அலேவதனுலேதான் சமூகம் இவ்வித நிலேக்கு உந்தப்படுகிறது. பரிசு பெற்ற நூலே எவரும் நெருங்குவதில்லே. நூலே ஆராய்ந்து இந்நூல் பரிசுக்குத் தகுந்ததா என்ற நிலே உருவாக வேண்டும்."

இவ்வாறு ஸ்ரேயல் கல்லூரி தமிழ்த்துறைத் தலேவரும் சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்றவருமான திரு. கி.இலட்சுமணன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற பாராட்டுபசாரத்தில் பேசும்போது தெரிவித்தார். சாகித்தியமண்டலத்தின் பரிசைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் திரு. டொமினிக்ஜீவா பண்டிதர் வ. அருளம்பலவனர், திரு. சோ. சிவபாதசுந்தரம், திரு. கி. இலட்சுமணன் ஆகியோரைப் பாராட்டுமுகமாக யாழ்ப்பாண எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் சென்ற சனிக்கிழமை இந்தப் பாராட்டுபசாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு திரு. இ. மகாதேவா தலேமை வகித்தார்.

திரு. இலட்சுமணன் தொடர்ந்து பேசுகையில் சமூகத்திலுள்ள இந்த இடர்பாட்டுக்காக ஒதுங்கியிருந்து கொண்டாலும் சமூகத்தில் ஒருவன் என்ற காரணத்தினல் அப்படிச் செய்து கொள்ள முடியவில்லேயென்றும் மேடைக்கு முன்னும் மேடைக்குப் பின்னும் நடக்கும் இரண்டும் சேர்ந்த ஒன்றே உலகமென்றும், மாஸ்கோவில் நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டில் பங்குபற்ற வைத்த அரசாங்கத்தின் குற்றத்துக்குப் பிராயச்சித்தமாகவே தாம் பரிசு பெற்ற நூலே வெளியிட்டதாகவும் கூறினர்.

திரு. அருளம்பலவனர் பேசுகையில் கூறியதாவது:

வாழ்க்கையையும் பண்பாட்டையும் காட்டுவது இலக்கியம். இலக்கியமே காலக் கண்ணுடி. பண்டைய அரசரது வாழ்க்கை முறைகளேத் தவவது சங்க இலக்கியங்களே. இந்நூல் மக்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கின்றன. சங்க இலக்கியங்கள் மூலதராமான வித்துப் போன்றவை. அவற்றிலிருந்து ஆயிரக்கணக்கான படைப்புகள் வெளிவந்தன. பதிற்றுப் பத்து இமயத்தில் கொடி பொறித்த சேரர் வரலாற்றைச் செப்பும் உன்னத காவியம். பண்டைய நூல்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். புத்துயிரளிக்கப் படல்வேண்டும்."

திரு. டொமினிக்ஜீவா பேசியதாவது:

வாழ்க்கைத் துன்பத்தின் சாயலே கண்ணீர். அதற்கிடையே என்னே வளர்த்தவையே தண்ணீர். நாட்டின் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபடும் அத்தனே எழுத்தாளரையும் நான் நேசிக்கிறவன். இதனுல் நான் கோஷ்டியை விரும்பினவன் அல்ல. 25 வருடங்களுக்கு முன்னிருந்த சமூகத்தின் நிலே மாணவ காலத்தில் ஆசிரியரின் கசப்புக்கு ஆளாக்கி கத்தி பிடித்து மயிரரிய வைத்தது இதுவே எனது கண்ணீர். நான் தலேக்கனம் பிடித்தவனல்ல. ஆனல் தன்னம்பிக்கையும் துணிவும் உள்ளவன்.

பரிசுக்குரியவனுனதன் பின் என் தொழிலேச் செய்ய முடியாதவாறு நேரயின்றிவருவாய் பாதிக்கப்பட்டு வருவதை மனவருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

பரிசுபெற்ற எழுத்தாளர்களே பாராட்டி திரு. கனக. செந்திநாதன் பேசும்போது சமாதானப் புருவைப் பறக்கவிட்டு அப்படியான முயற்சுக்குப் பரிசளிப்பு நடைபெற்றுவரும் இந்நேரத்தில், பதிற்றுப் பத்துப் போன்ற சிறந்த நூல்களுக்கு சாகித்திய மண்டலம் பரிசளித்தமை பாராட்டப்பட வேண்டிய தொன்றென்றும் புதிய படைப்புகளுக்கு அதிக ஆதரவு கொடுக்கப்பட வேண்டுவதோடு அப்படியான படைப்புகள் பல நம்மத்தியில் வெளிவர வேண்டுமென்றும் கூறினர்.

கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். இராசநாயகம், டாக்டர் நந்தி, கே. டானியல், யாழ்ப்பாணன் ஆகியோரும் பேசினர். தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது.

# தோட்டத் தொழிலாளருக்கு கருவாடு கிடைப்பதில்லே

மத்துகம, செவ்வாய்

இப்பகுதியில் கிராம வாசிகளுக்கும் பட்டின வாசிகளுக்கும் மட்டுமே கூட்டுறவுச் சங்கக் கடைகளிலிருந்து கருவாடு விநியோகிக்கப்படுகிறது. ஆனல் தோட்டத்தொழிலாளருக்கு கருவாடு கிடைப்பதில்லே. தோட்டத் துரைமார்களும் இதுபற்றி இதுவரை கவனம் செலுத்தாதிருக்கிருர்களெனத் தெரிகிறது.

# மாணவி தற்கொலே

அக்கரைப்பற்று, ஞாயிறு

நச்சுத்திராவகங்கள் பொது மக்களுக்கு சுலபமாக கிடைக்கக்கூடியதாக இன்று இருந்து வருகிறது. இதனல் தற்கொலேச்சம்பவங்களும் மிகவும் சுலபமாக நடைபெற்றுக் கொண்டுவருகிறது. உடனடியாக அரசாங்கம் அபாயகரமான நச்சுத்திராவகங்களே பொதுமக்களுக்கு சுலபமாகக் கிடைக்கக்கூடாதவாறு கட்டுப்படுத்தமுன்வரவேண்டும். இவ்வாறு அக்கரைப்பற்று எட்டாம் குறிச்சியைச் சேர்ந்த 14 வயதுள்ள செல்வி மாயாவதி வேலுப்பிள்ளே என்னும் மாணவி நஞ்சுத்திராவகம் அருந்தி தற்கொலே செய்து கொண்டது சம்பந்தமாக மரண விசாரணேநடத்திய மரணவிசாரணே அதிகாரி ஜனப். எம். எஸ். எம். முஸ்தபா குறிப்பிட்டார்.

நேற்று மாலே செல்வி மாயாவதியின் தாய் திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளேயும், தந்தை திரு. வேலுப்பிள்ளேயும் சேர்ந்து "இனிமேல் பாடசாலேக்குப்போகவேண்டாம். வீட்டில் வேலேயிருக்கிறது. பாடசாலேக்குச் செல்வதற்கு புஸ்தகங்கள் வாங்குவதற்கும், துணிமணிகள் வாங்குவதற்கும் பணம் இல்லே" என்று தெரிவித்ததாகவும் இதனல் மனச்சோர்வடைந்த செல்வி மாயாவதி இன்று காலே வீட்டில் பாவனேக்கு வைக்கப்பட்டிருந்த நஞ்சுத்திராவகத்தை அருந்தித் தற்கொலே செய்து கொண்டதாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் நடத்திய விசாரணேயிலிருந்து தெரியவருகிறது.

# பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ....?

## செத்துப்பிழைத்த தம்பி கதை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமது சகோதரரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கோணமலேக்கு மோட்டாரில் விரைந்துசென்ற ஒருவர் சகோதரனுடன் மகிழ்ச்சியாக யாழ்ப்பாணம் திரும்பிய சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றிருக்கிறது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவக்கொழுந்துவின் தம்பியான செல்லேயா என்பவர் திருக்கோணமலேயிலுள்ள வெருகல் என்னுமிடத்தில் தொழில் செய்துவருகிருர்.

"செல்லேயா இறந்துவிட்டார். வெள்ளிக்கிழமை ஈமக்கிரியைகள் "உடன் வரவும்" என்ற தந்திச்செய்தியொன்று வெருகலேச்சேர்ந்த சண்முகம் என்பவரால் சிவக்கொழுந்துவுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருந்தது.

இந்த இழவுச் செய்தி கேட்ட சிவக்கொழுந்து வாடகைக்கு ஒரு மோட்டாரை அமர்த்திக் கொண்டு தம்பியாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள விரைந்தார்.

ஆனல் திருமலேயை அடைந்ததும் தம்பி தெருவில் நடந்து கொண்டுவருவதை நேரிற் கண்டபோதும் தன்னேயே மறந்து கண்களேயே நம்ப முடியாமற் போனதில் என்ன ஆச்சரியம்!

கடைக்குச் சாப்பிடுவதற்குத் தெருவில் வந்துகொண்டிருந்தவர் தம்பி செல்லேயாவேதான்! சிவக்கொழுந்து தன் தம்பி செல்லேயாவுடன் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தார். இது கதையல்ல உண்மைச்சம்பவம்.

இதுபற்றிப் பொலிசாருக்கு புகர் செய்யப்பட விருப்பதாகத் தெரிகிறது.

# 'தடிகொண்டு கனியவைத்தால் சுவைஇருக்காது'

## பாராட்டுபசாரத்தில் உதவி மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"வீட்டுக்குவீடு வாசற்படி என்பதுபோல் சமுகக் கட்டுப்பாடுகள் எங்குமுண்டு. ஆனல் சமுகக்கட்டுப்பாடுகள் நிலேயானவையல்ல. மக்கள் எண்ணத்தில் மாற்றம் வந்துகொண்டே இருக்கும். மனமாற்றம் ஏற்படாதவர்களும் சமுகத்தில் இருக்கலாம். ஆனல் நிலேமை இப்படியே நீடித்திருக்கப் போவதில்லே. நாம் நம்மிடையே ஒற்றுமையைக் கட்டுப்பாடாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நன்மை செய்யப் பிறந்த நாம் நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாமலிருக்கலாம். நமது மனச்சாட்சிக்குப் பிழையில்லாமலும் மற்றவர்கள் மனச்சாட்சி சரியெனச் சொல்லக்கூடியதாகவும் வாழ்ந்து மற்றவர்களேயும் வாழவிடுதலே மேலானது."

இவ்வாறு அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர்மகாசபையினல் தமக்களிக்கப்பட்ட பாராட்டுவிருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது உதவிமேயர் திரு.என். டி. செல்லத்துரை கூறினர். இப்பாராட்டுபசாரக் கூட்டம் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலேமையில் யாழ்ப்பாணம் சேணியதெரு மெதடிஸ்த பாடசாலே மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

திரு. செல்லத்துரை தொடர்ந்து பேசியதாவது:-

நாம் இந்த மகாசபையின் அங்கத்தவர்கள். அதே நேரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாகவும் இருக்கிறோம். மகாசபையின் காரியங்களே அரசியல் கட்சியுடனும், அரசியல் கட்சியின் காரியங்களே மகாசபையுடனும் கலந்து சிக்கல்களே உண்டுபண்ணுது அதற்குரிய இடத்தில் அந்தந்தக்காரியங்களேப் பார்ப்பது நல்லது. மகாசபையில் கட்சி இடம்பெறுமானல் பலம் பொருந்திய மகாசபை சிதறுண்டுசின்னபின்னமாகிவிடும். நடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால் எமக்கிடையேயிருந்த ஏற்றத்தாழ்வுகள் என்றிருந்த பலகாரியங்கள் இன்று சமுகத்தில் இல்லே. காலப்போக்கிற்கேற்பச் சமுகத்திலும் மாற்றம் ஏற்படும். இந்த மாற்றங்களேத் தடுத்துவிட முடியாது. தானே கனியக்கூடிய காயைத் தடிகொண்டு அடித்துக் கனிய வைத்தால் அதிற் சுவையிருக்காது."

திரு. சுப்பிரமணியம் தமது தலேமையுரையில் உதவிமேயர் பதவியை வகிக்கும் முதலாவது சிறுபான்மைத் தமிழர் என்ற புகழுக்கு இலக்கான திரு. செல்லத்துரை பெரும்பான்மைத் தமிழரிடையேயும் செல்வாக்குப்பெற்ற ஓர் சிறந்த சேவையாளர் எனக் கூறினர்.

திரு. சிவபாதம் வரவேற்புப் பத்திரம் ஒன்றை வாசித்தளித்தார்.

திருவாளர்கள்: டொமினிக் ஜீவா, கே. டி. மாணிக்கம், இ. வி. செல்வரத்தினம், கே. டானியல் ஆகியோரும் இன்னும் பலரும் பேசினர்.

# ஸ்புட்னிக் வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்திற்கும், ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம் 1-ம் 3-ம் ஆட்டங்களில் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு திரு. ஆர். சண்முகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

கொழும்பு, ஞாயிறு

இன்றுமுதல் நாடெங்கும் சர்வதேச சிறுவர்தினம் கொண்டாடப்படும். கொழும்பில் 14 பாடசாலேகளில் 14 சேவை சங்கங்கள் அமைக்கப்படுவதுடன், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் கட்டுரைப் போட்டி ஒன்றும் நடத்தப்படும்.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே







மொத்த விற்பனே விநியோகஸ்தர்கள்:
மில்லர்ஸ் லிமிடெட், கொழும்பு.

முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 3-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பேச்சு.

இரவு 7-00 பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 திருவாரூர் ஆர். சரோஜா - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 திருவாரூர் ஆர். சரோஜா - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வி. துரைசுவாமி - பேச்சு, 7-45 மாயூரம் வி. ஆர். கோவிந்தராஜபிள்ளை திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை - இரு வயலின்கள், 9-15 சென்னை அஞ்சல், 9-30 நாட்டுப்பாடல்கள், 9-50 சென்னை அஞ்சல்.

## பாரதி விழா

வேலணை, திங்கள்

"கவிஞர்கள் குழந்தையுள்ளம் படைத்தவர்கள். பாரதியும் குழந்தையுள்ளம் படைத்தவர் தான். அவர் குழந்தைகளின் உள்ளத்தை அறிந்து அவர்களுக்கேற்ற பல பாடல்களைப்பாடியுள்ளார். பாரதியின் படைப்புகளில் தலை சிறந்து விளங்கும் பாஞ்சாலி சபதம் கூட எளிய நடையில் அமைந்துள்ளது.

இவ்வாறு வேலணை இலக்கிய மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற பாரதிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பண்டிதர் அ. பொன்னுத்துரை கூறினர். திரு. வ. கந்தசாமி, திரு. சி. மகாதேவா, திரு. கு. வி. செல்லத்துரை ஆகியோரும் பேசினர். திரு. சோமசுந்தரம் நன்றி கூறினர்.

## வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவு

காங்கேசன் துறை, திங்கள்

தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் மயிலிட்டி விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு பகுதியினரும் தலா ஒவ்வொரு கோல்கள் அடித்தமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டிக்கு திரு. கே. ரஜயபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விசேஷ அபிஷேகம்

வேலணை, திங்கள்


வேலணை வடக்கு மயிலைப் புலம் ஐயனர் கோவிலில் அப்பகுதிச் சிறுவர்களின் முயற்சியால் விசேஷ அபிஷேகமொன்று நடைபெற்றது.

## 6 பேர் மாண்டனர்

அல்ஜியர்ஸ், அக். 2

அல்ஜீரியாவில் சென்ற சனிக்கிழமை நடந்த கைகலப்பில் ஆறுபேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இக்கைகலப்பில் பிளாஸ்டிக் வெடிகுண்டுகளும் வீசப்பட்டன.


# பீ. சீ. சீ. சந்தண சோப்




ஆடவர்கள் முதல்
ஆரணங்குகள் வரை
பாவிப்பது
நறு மணம் கமழும்
பீ. சீ. சீ.
சந்தண
சோப்பே

# முகம்மதுஅலி அப்துல்அலி

பெரியகடை, யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம்

# உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பம்

## முதல்நாள் வைத்தீஸ்வரா வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினல் வருடாவருடம் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டி சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாயிற்று.

முதலாம் பிரிவில் 19 பாடசாலைகளும் இரண்டாம் பிரிவில் பதினெரு பாடசாலைகளும் கலந்து கொள்ளுகின்றன. நவம்பர் மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் இறுதிப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

கடந்த வெள்ளிக் கிழமை முதலாம் பிரிவுக்கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் கோஷ்டியும், சாவகச்சேரி ட்றீபேக் கல்லூரிக் கோஷ்டியும் மோதின. இரு கோஷ்டியும் தலா ஒரு கோலைப் பெற்றதனல் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

இப் போட்டிக்கு திரு. எஸ். எம். மாட்டீன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக் கோஷ்டியும் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரக் கோஷ்டியும் கலந்து கொண்டன. கடைசி ஐந்து நிமிடத்துக்குள் வைத்தீஸ்வரா இரு கோல்களைப் போட்டு வெற்றியீட்டிக்கொண்டது. இந்த இரு கோஷ்டிகளும் ஒன்ருகக் கணிக்கத்தக்க தரத்தில் இருந்தமையால் இறுதி ஐந்து நிமிடங்களுக்கு முன் வெற்றியாருக்கு என்று ஹேஷ்யமே சொல்லமுடியாதிருந்தது.

இப் போட்டிக்கு திரு. இ. சபாலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## "விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்கவேண்டும்"

### பரிசளிப்பு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மத்தியகல்லூரி இடைநிலை வகுப்புகளுக்கான வருடாந்தப் பரிசளிப்பு வைபவம் வண. டி. டி நைல்ஸ் தலைமையில் நடைபெற்றது.

திரு. நைல்ஸ் பேசும்போது இடைநிலை வகுப்புக்கள் அதிகமாகக் கவனிக்கப்படாது விடப்பட்டுவருவதாகவும் இப்படியான திட்டத்தின் மூலம் இவ் வகுப்புமாணவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டுமெனவும் சொன்னர்.

பரிசில் வழங்கிய திருமதி எஸ். நடராசா பேசுகையில் மாணவர்கள் எதையும் விஞ்ஞானக்கண்கொண்டு பார்க்க வேண்டுமென்றும் ஏன் எதற்காக என்ற கேள்விகள் மாணவர் மத்தியில்முகிழ்க்கவேண்டுமென்றும் இந்த வளர்ச்சிப் போக்குக்கு ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இடைநிலை வகுப்புகளின் மேற்பார்வையாளரான திரு. என். எஸ். இரத்தினசிங்கம் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

## தொழில் நிலையத்துக்கு புதிய மண்டபம்

ஊர்காவற்துறை, செவ்வாய்

ஊர்காவற்துறை கயிற்றுத் தொழில் நிலையத்துக்கு புதிய மண்டபம் அமைக்கும் முயற்சிகள் அநேகமாகப் பூர்த்தியடைந்து விட்டன.

விரைவில் தற்காலிக மண்டபத்திலிருந்து புதிய நிலையத்துக்கு இயந்திரங்களை மாற்றம் செய்து இங்கு புதிய வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனத்தெரிகிறது.

## மீன்சந்தை நிறுவ தீர்மானம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

அல்லைப்பிட்டிப் பகுதியில் மீன்சந்தை நிறுவ வேண்டுமென்றும், மீன் உத்தரவாத விலைக்கு விற்கப்பட வேண்டுமென்றும் திரு. செ. இராசையாவால் அல்லைப்பிட்டி கிராமச் சங்கத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேறியது.

தலைவர் திரு. க. கைலாசபிள்ளை, ஜே. பி. தலைமையில் நடந்த இச்கூட்டத்தில் மண்கும்பானில் நாளொன்றிற்கு சராசரி 100 லொறிகள் மணல் கொள்வனவு செய்து வருகிறதென்றும், கட்டிட வேலைகளுக்கு இம்மணல் மிகவும் உகந்தவையாதலால் யாழ்ப்பாணப் பகுதி எங்கும் ஏராளமான மணல் ஏற்றுமதியாகிறதென்றும் இதனல் லாபம் பெறும் மணல் சொந்தக்காரர்கள் வருடம் ஒன்றிற்கு ரூபா 150 கிராமச்சங்கத்திடம் செலுத்தி அனுமதி பெறவேண்டுமென்னும் தீர்மானமும் நிறைவேறியது.

## பாரதி வெற்றி

கீரிமலை, திங்கள்

காந்தி கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் பொன். கந்தையா மாணவர் மன்ற இல்லங்களான கலியாண சுந்தர இல்லத்திற்கும், பாரதி இல்லத்திற்கும் இடையில் நடைபெற்ற கைபந்தாட்டப் போட்டியில் பாரதி இல்லம் முதலிரு ஆட்டங்களிலும் 15-7, 15-5 புள்ளிகளைப் பெற்று வெற்றி யீட்டியது.

திரு. கே. செல்வராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## ஸ்டாருக்கு வெற்றி

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன் கைப்பந்தாட்டக் கழகத்திற்கும், தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகம் முதலிரு ஆட்டங்களிலும் 15-11, 15-8 புள்ளிகளைப் பெற்று, வெற்றி பெற்றது. இப்போட்டி காங்கேசன் துறைப் பட்டினசபையின் சுகாதார விழாவை முன்விட்டு ஸ்புட்னிக் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

திரு. ஆர். சண்முகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்

## இந்து இளைஞர் இயக்க 11வது ஆண்டு விழா

பண்ணகம், திங்கள்

"நாம் சமய ஆசாரப்படி வாழ முயல வேண்டும். நல்ல சமய நூல்களைப் படித்து நமது உள்ளத்தைப் பண்படுத்தி சாதி, மத வேறுபாடின்றி சமரசமாக வாழ முற்படவேண்டும்"

இவ்வாறு வழக்கறிஞர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பண்ணகம் வடக்கு இந்து இளைஞர் இயக்க 11வது ஆண்டு விழாவில் 'சமயமும் நாமும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் பேசுகையில், தமிழ் மக்கள் தமது நிலையை உயர்த்தப்பாடுபட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

திரு. கந்தசாமி, புதுமைலோலன் ஆகியோரும் பேசினர்.

திரு. சி. கந்தையா விழாவுக்குத் தலைமை வகித்தார். திரு. வ. சுப்பிரமணியம் நன்றியுரை கூறினர்.

# காங்கேசன்துறை

## பட்டின சபைத்தலைவர் நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று விவாதத்துக்கு வரும்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் ஆ. வ. சதாசிவத்தின்மேல் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட் டிருக்கிறது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமாக விவாதிப்பதற்கான இப்பட்டின சபையின் விசேட கூட்டமொன்றை ஸ்தலஸ்தாபன உதவிக் கமிஷனர் திரு. ஏ. ஏ. ஜோசேப் கூட்டியிருக்கிறார்.

3-ம் திகதி செவ்வாய்க்கிழமை உதவிக் கமிஷனர் திரு. ஏ. ஏ. ஜோசேப் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத்தெரிகிறது. மொத்தமுள்ள 6 அங்கத்தவருள் நால்வர் இப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளனர்.

## சிகரெட் விலை குறைப்பு

### மந்திரி ஆலோசனை

கொழும்பு, திங்கள்

சிகரட் விலையில் ஒரு சதத்தைக் குறைக்கும் தீர்மானமொன்றை உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு.டி.பி. இலங்கரத்னகொண்டுவந்துள்ளார். நிதிமந்திரி இலங்கை திரும்பியதும் இதுபற்றி ஆலோசனை செய்வார்.

புகையிலை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கவே இவ்வித விலைக்குறைப்புச் செய்யவேண்டுமென மந்திரி தெரிவித்துள்ளார்.

நடப்பு வருடத்தில் 4 கோடி ருத்தல் புகையிலை உற்பத்தி செய்ய இலங்கை புகையிலைக் கம்பனி தெரிவித்துள்ளதாக மந்திரி அறிவித்துள்ளார். சிகரட் விலையேற்றத்தினல் 2 கோடி ருத்தல் புகையிலை வீணாகிவிடும் எனவும் இதனல் நாட்டின் வருமானம் அதிகம் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருடர் செவிடர் ஸ்தாபனங்கள்

### புதிய மாற்றம்

கொழும்பு, திங்கள்

குருடர் செவிடர்களுக்கு உதவி புரியும் சேவையிலீடுபட்டிருக்கும் ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வித ஸ்தாபனங்களின் நிர்வாகப் பொறுப்பை சமூக சேவா இலாகா மேற்கொண்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அங்கவீனர்கள் அரசாங்கத்தின் உதவியை அதிகம் பெருது வாழ்வதற்கு வழிவகுக்கவே இந்த மாற்றத்தைச் செய்ய அரசாங்கம் ஒழுங்குசெய்துள்ளது.

## 1963க்கு முன் ஜனத்தொகை மதிப்பீடு

கொழும்பு, திங்கள்

1963-ம் ஆண்டு முடிய முன்னர் வர்த்தகம், ஜனத்தொகை, விவசாயம், வீடமைப்பு, கைத்தொழில் என்பன பற்றி அகில இலங்கையின் புள்ளிவிபரங்களை மதிப்பீடு செய்யும்படி சனத்தொகை புள்ளிவிபர மதிப்பீடு இலாகாவை அரசாங்கம் கேட்டுள்ளது.

ஐந்து புள்ளிவிபர மதிப்பீடுகளும் வெவ்வேறாக அமையும் எனினும் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவும் இருக்கும்.

# விசா வைத்திருப்பவரே விநியோகம்செய்கின்றனர்

கொழும்பு, திங்கள்

பொருள்கள் இறக்குமதி செய்வதற்கென இலங்கை வர்த்தகருக்கு வழங்கப்பட்ட லைசன்ஸ்களுக்கு அவர்கள் அப்பொருள்களை விநியோகம் செய்யாமல் விஸா வைத்திருப்பவர்களிடம் பொருள்களைக் கொடுத்து விடுகின்றார்களென வர்த்தக போக்குவரத்து அமைச்சுக்குத் தெரியவந்துள்ளது.

'இந்த நிலை நீடிக்குமானல் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இவ்வித வர்த்தகங்களைப் பொறுப்பேற்று நடத்த வேண்டிவரும்' என வர்த்தக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மும் மொழி போஸ்டல்ஆர்டர்கள்

கொழும்பு, திங்கள்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் வெளியான போஸ்டல் ஆர்டர்கள் விநியோகத்தைப் போக்குவரத்துமந்திரி திரு. கலுகலே இன்று ஆரம்பித்துவைத்தார். கொழும்பு பெரிய தபாற்கந்தோரில் இருபோஸ்டல் ஆர்டர்களை அவர் வாங்கியபின், அங்கிருந்த மக்களிடம் பேசுகையில், இலங்கைத் தபால்சேவையின் தரத்தை இதர முன்னேற்றநாட்டு தபாற் சேவையின் தரத்துடன் ஒப்பிட்டார்.

## ஒவ்வொரு தினமும் 19 பேர் இறக்கின்றனர்

கொழும்பு. திங்கள்

குடல்நோயினலும் உணவுக்கோளாறுகளினலும்ஒவ்வொரு நாளும் இலங்கையில் சராசரி 19 பேர் இறக்கின்றனரென அறியப்படுகிறது.

16 இறப்புக்கள் குடலிலேற்படும் நோயினல்தான் நிகழ்கின்றன என்றும் மிகுதி மூன்றும் பலவீனம் காரணமாக நிகழ்கின்றன என்றும் சுகாதார இலாகாவுக்குத் தெரியவந்துள்ளது.

## மனேகருக்கு தமிழ் ரசிகர்கள் வரவேற்பு

கொழும்பு, திங்கள்

இலங்கை வந்திருக்கும் தமிழ் சினிமா நடிகர் மனேகருக்கு இலங்கை தமிழ்சினிமா ரசிகர்கள், நாளை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஒரு வரவேற்பளிப்பார்கள்.

## தென்னட்டில் புதிய ரயில் பாதைகள்

சென்னை, அக். 2

சேலம்-பங்களூர்ரயில்பாதையும், மானமதுரை - விருதுநகர் ரயில்பாதையும் 3ம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது அமைக்கப்படும். முதல்திட்டத்துக்கு 7 கோடி ரூபாயும், அடுத்த திட்டத்துக்கு 3 கோடி ரூபாயும் செலவாகும்.

## யாழ்ப்பாண புதிய ஆணையாளர் திரு. ஜெயசிங்கா நேற்று பதவி ஏற்றார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய ஆணையாளராக திரு. டி. டி. ஜெயசிங்கா இம்மாதம் முதலாந்திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார். நீர்கொழும்பு நகரசபை ஆணையாளராகவிருந்த அவர் நேற்று யாழ்ப்பாண ஆணையாளராகப் பொறுப்பேற்றுள்ளாரெனத் தெரிகிறது.

மாநகரசபை மேயர் இங்கில்லாத சமயத்தில் அவர் இங்கு வந்திருந்தபோதிலும் அவர் தமது கடமைகளை உடனடியாகவே செய்ய ஆரம்பித்திருக்கிறாரெனத் தெரிகிறது. சபையின் தீர்மானப்படி மாநகர சபைக்கணக்காளரான திரு. ஹட்சன் செல்வராசா தற்காலிக கமிஷனராகக் கடமையாற்றிவந்தார். இன்று அவர் முன்போலவே கணக்காளர் காரியாலயத்தில் காணப்பட்டார்.

யாழ்ப்பாண மாநகரசபையில் நீண்டநாட்களாக இருந்து வரும் ஆணையாளர் இடமாற்றப்பிரச்சினையோடு திரு. ஜெயசிங்காவின் புதிய நியமனமும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

திரு. ஜெயசிங்கா இன்று ஊழியர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

## இலங்கையர் மயமாக்கும்படி மகஜர்

கொழும்பு, திங்கள்

இலங்கை இறக்குமதி ஏற்றுமதியாளர் சங்கம் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் இலங்கை இறக்குமதி ஏற்றுமதியை இலங்கையர் மயமாக்கும்படி கேட்டுள்ளது. இவ்வாறு செய்தால் இறக்குமதி ஏற்றுமதிகளில் திருட்டுகளும் கொள்ளைகளும் நடைபெறுவதென்ற குற்றச்சாட்டுகளுக்கு இடமிருக்காது என இறக்குமதி ஏற்றுமதியாளர் சங்கம் அம் மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

1958-ம் ஆண்டு இறக்குமதியில் 16.5 வீதமே இலங்கையர் கையில் இருந்ததென்றும் 1959-ல் 15.6 வீதமாக அது குறைந்ததென்றும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

## ஸ்ரீமதி பண்டிட்

புதுடில்லி, ஆக. 2

சுவீடனில் திரு. ஹமர்ஷில்டின் மரணச்சடங்கில் கலந்து கொண்டுவிட்டு ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இன்று பம்பாய் திரும்பினர்.

## எஃகு தொழிற்சாலை இங்கு நிறுவப்படும்

கொழும்பு, திங்கள்

இலங்கையில் ஒரு எஃகுத் தொழிற்சாலைக் கார்ப்பரேஷனை நிறுவ ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாக நேற்றிரவு வெளிவந்த விசேஷ கசட்மூலம் அறிவிக்கப்பட்டது.

செப்டெம்பர் 14-ம் திகதி இத் திட்டத்துக்கான பிரேரணை பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது. 8 கோடி ரூபாய் செலவில் இந்த உற்பத்திச்சாலை ஆரம்பமாகும். கார்ப்பரேஷனின் டைரக்டர்கள் சபையில் கீழ்க்கண்டோர் அங்கத்துவம் வகிப்பார்கள்:

திருவாளர்கள் சார்ல்ஸ் அபயசேகரா (தலைவர்) சி. ஈ. எச். அமரசேகரா, ஏ. என் எஸ். குலசிங்கி, பி. பி. மாணிக்கம், எஸ். டபிள்யு. பீரிஸ், சி. இராசையா, பி. பி. ஜி. எல். சிறிவர்த்தன.

# அரசாங்கசேவை குமாஸ்தாக்கள் சங்க காரியாலயம்

## ரூ. 3 லட்சம் கடனளிக்க முடிவு

கொழும்பு, திங்கள்

பார்சன்ஸ் வீதியில் தற்போது கட்டப்பட்டுவரும் அரசாங்க சேவைக்குமாஸ்தாக்கள் சங்கத்தின் புதிய தலைமைக்காரியாலயத்தைக் கட்டுவதற்காக அரசாங்கம் ரூ. 3 லட்சம் கடனைக் கொடுக்கச் சம்மதம் தெரிவித்துள்ளது.

சங்கம் ரூ. 3 லட்சம் கடனைத் தருமாறு அரசாங்கத்திடம் கேட்டிருந்தது. ஆனல் இந்த வருடம் ரூ. 3 லட்சம் கொடுப்பதெனவும் மிகுதி அடுத்த நிதி வருடத்தில் கொடுப்பதெனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உதவி மந்திரி இந்த கடன் உதவி வழங்குவதை சிபார்சு செய்தார். மந்திரி சபையால் இது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## கொழும்பில் திரைப்பட விழா

கொழும்பு, திங்கள்

சர்வதேச திரைப்பட விழா ஒன்றை, வருகிற 12-ம் திகதி, பிரதமர் கொழும்பு சவாய்தியேட்டரில் ஆரம்பித்துவைப்பார்

## மாணவர்கள் அவதி

கொழும்பு, திங்கள்

கட்டுபெடையிலுள்ள தொழில் நுட்ப பாடசாலை ஹாஸ்டல் கட்டிடத்தில் இன்னும் மாணவர்கள் தங்காமலிருக்கிறார்கள். கல்லூரிக்கருகாமையிலுள்ள தனிப்பட்ட வீடுகளில் கட்டணம் கொடுத்து அவர்கள் தங்கவேண்டியிருக்கிறது.

# "க்ஷயரோகிகளுக்கு இலவச பஸ்சேவை அளிக்கவும்"

## சங்கத்தின் வேண்டுகோள்

கொழும்பு, திங்கள்

க்ஷயரோக நோயாளர்கள் தாம் வசிக்கும் இடங்களிலிருந்து ஆஸ்பத்திரிகளுக்கு இலவசமாக பஸ்ஸில் செல்வதற்கு அனுமதியளிக்கப் படவேண்டுமென இலங்கை க்ஷயரோகத் தடுப்புச்சங்கம் இ. போ. ச. வைக் கேட்டுள்ளது.

பஸ்சேவையை இ. போ. ச. பொறுப்பேற்குமுன்னர் இந்த நோயாளர்களுக்கு இவ்வித சலுகை அளிக்கப்பட்டுவந்ததாக சங்கத்தின் பிரதான அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அதிகமான க்ஷயரோக நோயாளர்கள் ஏழைகள். இவர்களிற்சிலர் பஸ் கட்டணமும் செலுத்தமுடியாத நிலையிலிருக்கின்றனர். இவர்கள் குறிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளாவிட்டால் க்ஷயரோகத்தைத் தடுப்பதில்

## துறைமுகத்துக்கு வெளியே 21 கப்பல்கள்

கொழும்பு, திங்கள்

இன்று காலை 21 கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே நின்றன.

வெளியில் நின்ற கப்பல்களில் 7 கப்பல்கள் உணவு ஏற்றிவந்த கப்பல்கள் எனத் தெரிகிறது.

1959-ம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் 36 கப்பல்கள் நின்றன. இதன்பின்னர் இப்பொழுதுதான் இவ்வளவு தொகையான கப்பல்கள் ஒரேமுறையில் காத்துநின்றுள்ளன.


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை6-30க்கும் இரவு 9-30 க்கும்

சிவாஜி கணேசன் - பத்மினி
நடித்த
அமர தீபம்

Monday to Thursday 2-nd to 5-tn 4-30 p. m.

ONE FOOT IN HELL


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.